# இனியவை நாற்பது

## கடவுள் வாழ்த்து

கண்முன் றுடையான்தாள் சேர்தல் கடிதினிதே
தொல்மாண் துழாய்மாலை யானைத் தொழிலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்தல் இனிது.

முக்கண்ணனான சிவனது திருவடி நிழலைச் சேர்ந்திருப்பது இனிது. மாலை யானையாகிய திருமாலை வணங்குதல் இனிது. நான் முகனான பிரமதேவனை வாழ்த்துதல் இனிது.

1. **பிச்சைபுக் காயினும் கற்றல் மிக இனிதே**
   **நற்சவையில் கைகொடுத்தல் சாலவும் முன்னினிதே**
   **முத்தோர் முறுவலார் சொல்லின (து) ஆங்கினிதே**
   **தெற்றவும் மேலாய்ர்ச் சேர்வு**

பிச்சையெடுத்தாவது கற்றல் இனிது. சபையில் பேசும்போது கற்றவையெல்லாம் நினைவுக்கு வருதல் இனிது. மகளிரது வாய்ச்சொல் இனிது. அதுபோலப் பெரியாரைத் துணையாகக் கொண்டு வாழ்வது இனிது.

அருணாசலத்தின் ஏக புதல்வன் ஆரூரன் அருணாசலம் திருமணம் செய்து பத்து வருடங்கள் கழிந்தபோதும் பிள்ளைகள் பிறக்கவில்லை. அதனால் மனம் வருந்திய அவன் கடவுளை வணங்கி நோன்புகள் இருந்தான். அதன் பயனாகப் பிறந்தவன் தான் ஆரூரன். ஆரூரன் ஒரே பிள்ளையாகையால் பெற்றோரும், உற்றார் உறவினர்களும் செல்லம் கொடுத்துவளர்த்தனர்.

அதனால் அவன் பாடசாலைக்குச் செல்ல விரும்பவில்லை. அது அருணாசலத்திற்குப் பெருங்கவலை.யைக் கொடுத்தது.

ஆரூரன் க.பொ.த உயர்தரவகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அன்று பரீட்சை. பரீட்சை எழுத சோம்பற்பட்ட ஆரூரன் அன்று பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு நண்பர்களுடன் வேறெங்கோ சென்றுவிட்டான். அதை அவனது ஆசிரியர் அருணாசலத்திற்கும், அவனோடு கற்கும் மல்லிகா என்ற பெண்ணுக்கும் சொன்னார்.

வீட்டுக்குவந்த ஆரூரனுக்கு அருணாசலம் அன்புடன் சொன்னார், "மகனே, மனிதர்கள் கற்றல் வேண்டும். கல்வி தான் வாழ்க்கையைச் சிறப்பிப்பது. கல்வியின் பெருமையை அறிந்தவர்கள் பிச்சை எடுத்தாவது கல்வி கற்பர். உங்கள் பாடசாலை அதிபர் பிறந்தன்றே அவரது தாய் இறந்து விட்டாள். தகப்பன் இன்னொரு திருமணம் செய்து விட்டார். சித்தியின் கொடுமை தாங்கமுடியாத அவர் தமது உறவினர் ஒருவரின் தயவில் வாழ்ந்தார். ஊரவர்கள் பலர் அவர் கற்பதற்கு உதவி செய்தனர். கல்வி கற்றால் தான் வாழ்க்கை இனிக்கும். ஒருவன் பிச்சை எடுத்துக் கல்வி கற்றாலும் அக்கல்வி அவனுக்குப் பெருமையையும், நல்வாழ்வையும் கொடுக்கும். அதனால் படி" என்றார் அருணாசலம்.

அன்று மாலை கோயிலில் மல்லிகாவைக்கண்டான். ஆரூரன் வழமையாக அவளைக் கண்டால் அவள் சிரிப்பாள். இரண்டொரு வார்த்தைகளாவது பேசுவாள். ஆனால் அன்று அவள் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. அத்துடன் அங்கு நின்ற நகுலன் என்ற மாணவனுடன் சிரித்துக் கதைத்து விட்டுச் சென்றாள். அது ஆரூரனுக்குப் பெருங்கவலையைக் கொடுத்தது. அவளைக்கண்டது அவனது மனம் பரவசமடையும். அவள்

கதைத்தால் மனம் இனிக்கும். அவளது சிரிப்பு மனதில் தங்கியிருந்து நினைக்கும் போதெல்லாம் மனதைச் சிலிர்க்கப் பண்ணி இனிக்கவைக்கும். இன்று அவள் தெரியாதது போலச் சென்றது அவனது மனதைப் பிழிந்தது.

மறுநாள் அவன் அருகே வந்தபோது சொன்னாள், கற்றவர்களைக் கண்டால் தான் மனம் இனிக்கும். அதனால் இனிமேல் என்னோடு பேசவேண்டாம்''

ஆரூரன் தடுமாறிப்போனேன், ''மல்லிகா, நான் படித்தால் தான் நீ கதைப்பாயென்றால் நான் படிக்கிறேன்''.

''மறுநாள் பரீட்சை எழுதப்பாடசாலைக்குச் சென்றான் ஆரூரன். வினாத்தாளைப் பார்த்தபோது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவன் முதல்நாள் இரவு பரீட்சைக்கு வருமென நினைத்துப் பிடித்தவைநெல்லாம் வினாத்தாளில் கேட்கப்பட்டிருந்தது. அவனது மனம் மகிழ்ச்சியால் இனித்தது. அப்போது அதிபர் தணிகாசலம் சொல்வது அவனது காதில் ஒலித்தது.

''அன்பான மாணவர்களே ஆயத்தப்படுத்திய வினாக்கள் பரீட்சைக்கு வருவதும், ஆயத்தப் படுத்திய தகவல்கள் பேசும்போது நினைவுக்கு வருவதும் அதிட்டமானது, இனிமையானது, மகிழ்ச்சிக்குரியது. அதை நினைத்து மகிழ்ந்தவாறு பரீட்சையை எழுதினான்.

பரீட்சை முடிவுகளை அதிபர் அறிவித்தபோது சொன்னார், ''ஆரூரா, இம்முறை பரீட்சையை நன்றாகச் செய்துள்ளாய். உனக்குத் தேவையான உதவிகள் யாவற்றையும்

நான் செய்து தருவேன். நீ நன்றாகப்படி'' அதைக்கேட்க ஆரூரனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அன்றுமாலை மல்லிகாகோயிலுக்கு வந்திருந்தாள். அவனைக் கண்டதும் வந்து சொன்னாள், ''ஆரூரா, நன்றாகப் படித்திருக்கிறாய். கற்பது இனிமையானது. மேலும் கல். பெரியவரான அதிபரின் உதவி உனக்கு எப்போதும் இருக்கும். பெரியவர்களினது உதவிகள் கிடைப்பது மிகவும் இனிமையானது என்று சிரித்தாள். அவளது முத்துப்பற்களில் வீசிய ஒளி அவனது மனதை இனிக்கச் செய்தது.

**2. உடையான் வழக்சினி(து) ஒப்ப முடிந்தால்**
**மனைவாழ்க்கை முன் இனிது மாணாதா மாயின்**
**நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்**
**தலையாகத் தான் இனிது நன்கு**

ஏழைகளுக்கு உதவி செய்தல் இனிது. கணவனும் மனைவியும் மனமொத்து வாழ்ந்தால் அந்த வாழ்க்கை இனிது. உலகம் நிலையில்லாததென்பதை உணர்ந்து பற்றுக்களின்றி வாழ்வது மிக மிக இனிது.

அருணாசலத்தின் மனைவி கலைமகள். அருணாசலம் பெரும்விவசாயி. அவரிடம் கால் நடைகள் பண்ணையாக இருந்தன. ஆயினும் ஏக்கரில் நெல்விதைப்பார். அவரிடம் தென்னை வாழை, கமுகு, கரும்பு, போன்றன தோப்பாக உண்டு. நூற்றுக்கணக்கானோர் அவளிடம் வேலை செய்கின்றனர்.

அவரது வீட்டு முற்றத்தில் உள்ள பெரிய வேப்பமர நிழலில் அவரும் அவரது மனைவி கலைமகளும் காலையில் வந்திருப்பார்கள். உதவிகள் தேவையானோர் காலையில் வந்து

அவளைச் சந்திப்பார்கள். அன்று காலை அதிபர் தணிகாசலமும் மல்லிகாவின் தகப்பன் பொன்னம்பலமும் வந்திருந்தனர்.

காலையில் அருணாசலத்தைச் சந்திக்க வருவோருக்குப் பாலும் உணவும் கொடுக்கப்படும். வேலைக்காரன் இருவருக்கும் செம்பில் நீர்கொடுத்தான். அவர்கள் கை கழுவியபின் உணவு கொடுத்தான். அவர்கள் உணவை உண்டு விட்டுப்பால் குடித்த பின் அருணாசலத்தின் அருகே வந்து இருந்தனர்.

‘‘ஐயா, பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லை. மண்டல சேகரத்தின் காணியைக் கேட்டோம். அவர் கனடாவில் வசிப்பதால் அதைக் கனகசபை பராமரிக்கிறார். அவருக்கு விற்கும் உரிமையை வழங்கியுள்ளார். அதை வாங்கலாமென்று நினைக்கிறோம்’’.

‘‘நல்லது. நன்றாக விசாரித்து வாங்குவார்கள். அந்தக் காணியை மண்டல சேகரம் மகனுக்கு நன்கொடையாகக் கொடுத்ததாக அறிகிறேன். உலகில் ஏமாற்றுக்காரர் தான் அதிகம். பாடசாலைப் பிள்ளைகளுக்கு வருடாவருடம் கற்றல் உபகரணங்களும் வாங்கித் தருகிறனான். இம்முறை அவர்களுக்கு சீருடையும் வாங்கித்தருகிறேன்’’ என்றார் அருணாசலம்.

‘‘மிகவும் மகிழ்ச்சி ஐயா, உங்களால் பலர் வாழ்கிறார்கள்: பலர் கற்கிறார்கள்’’ என்றார் தணிகாசலம். .

‘‘பொருள் உள்ளவன் கொடுக்கவேண்டும். அது இனிமையானது. எம்மிடம் கற்க வசதியில்லை, வாழ வசதியில்லை, உண்ண வசதியில்லை என்று நினைத்து வருந்துவோருக்குக் கொடுத்தால் எவ்வளவு மனம் மகிழ்வார்கள்.

அந்த மகிழ்ச்சியைப் பார்க்கக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்'' என்று எனது மனைவி அடிக்கடி கூறுவாள். அவளது பேச்சு எனக்கு மிகுந்த இனிமையைத் தரும். கணவனும் மனைவியும் மனமொத்து வாழவேண்டும். இருவரும் சேர்ந்து தானதர்மம் செய்தல் வேண்டும். அப்படிச் செய்யும் குடும்பத்தினரது வாழ்க்கை பெறுமதியானது'' என்றார் அருணாசலம்.

''வாழ்க்கையை உணர்ந்து ரசித்து வாழ்பவர்கள் குறைவு. வாழ்வின் நிலையாமையை உணர்ந்து பற்றற்று இருவரும் வாழ்வதோடு உதவிகளும் செய்கிறீர்கள். உதவிகள் செய்யும் போது கூட நீங்கள் பாராபட்சம் காட்டுவதில்லை. இவ்வாறு வாழ முடியாது. ஆனால் நீங்கள் வாழ்கிறீர்கள். அதனால் எமது ஊர்சிறப்பாக இருக்கிறது'' என்றார் தணிகாசலம்.

**3. ஏவது மாறா இளங்கிளைமை முன் இனிதே**
**நாளும் நவைபோகான் கற்றல் மிக இனிதே**
**ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே**
**தேரிற்கோள் நட்புத் திசைக்கு.**

ஏவலை உணர்ந்து செய்யும் மக்களைப் பெறுவது இனிது. குற்றமில்லாமல் வாழ்ந்து நாள்தோறும் கற்றல் இனிது. தனக்கென உழுவதற்கு மாடுகளை வைத்து உழுவது இனிது. அதுபோலச் செல்லுமிடமெல்லாம் நல்லவர்களோடு நட்புக் கொள்ளல் இனிது.

''அப்பா, அருணாசலம் அண்ணா உரிய நேரத்தில் உரிய வேலைகளைச் செய்பவர். அத்துடன் பலவேலைகள் உள்ளவர். ஒன்று தாமதித்தால் எல்லாம் தாமதமாகிவிடும் என்று வருந்துவார். அதனால் எழுந்து வாருங்கள். குளித்துச் சாப்பிட்டு விட்டு வைத்தியரிடம் செல்லத் தயாராகுங்கள்.

அதன்பின் திருமணத்திற்குச் செல்ல வேண்டும்’’ என்றாள் மங்கையற்கரசி.

பேரம்பலம் தனது பிள்ளைகளை நினைத்துப் பெருமைப்பட்டார். முதல் நாள் அங்கு வந்த அருணாசலம்’’ அப்பா, காலை ஒன்பது மணிக்கு வருவேன். தயாராக இருங்கள்’’. என்று கூறிவிட்டுச் சென்றார். இளையமகன், ‘‘திருமாறன் ஒன்பது மணிக்கு நானும் உங்களுடன் வருகிறேன். பாடசாலைக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை உங்களின் கையில் தான் கொடுக்க வேண்டும்’’ என்றான். இரண்டு தினங்களுக்கு முன் கூழ்குடிக்க ஆசையாக இருக்கிறது’’ என்று பேச்சு வாக்கில் அவர் சொல்லி விட்டார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த இளையமகன் அமுதவல்லி உடனே தரதர வீட்டுக்குச் சென்று கூழ்காய்ச்சிக் கொண்டு வந்து விட்டாள். எதையும் நினைக்கலாமே தவிரச் சொல்லக் கூடாது. சொன்னால் பிள்ளைகள் செய்துமுடித்து விட்டுத்தான் தமது கருமங்களைக் கவனிப்பார்கள்’’ என்று நினைத்து மகிழ்ந்தவாது எழுந்தார் பேரம்பலம்.

‘‘வைத்தியர் பேரம்பலத்தின் உடலைப்பரிசீலனை செய்து விட்டுச் சொன்னார், ‘‘ஏவலை மறவாது செய்யும் மக்களைப் பெற்றதால் உங்கள் உடலில் எந்தவிதமான நோய்களும் இல்லை.

தந்தையை வீட்டில் கொண்டு சென்றுவிட்டு வயலுக்குச் சென்றார் அருணாசலம். உழவு இயந்திரம் பாவனைக்கு வரு முன்பு அருணாசலத்திடம் பத்து உழவு மாடுகள் நின்றன. அதனால் அவர் உரிய நேரத்தில் வயலை உழுது விதைத்து விடுவார். இப்போ உழவு இயந்திரங்கள் இரண்டு வாங்கி

வைத்துள்ளார். தனது வயல்களை உழுத பின் மற்றையோரது வயலை உழுது கொடுப்பார். அவரது நண்பர்கள் சொல்வார்கள், ‘‘விவசாயிகளிடம் உழவுமாடுகள் இருத்தல் வேண்டும். அப்போ தான் சிரமமில்லாமல் பயிர் செய்யலாம். நாம் உழவு மாடுகள் இல்லாததால் உழவு மாடுகள் உள்ளவனைக் கெஞ்சி மன்றாடி உழ வேண்டியுள்ளது. அதுபோலத் துன்பம் வேறு அதுவும் இல்லை’’ என்பார்கள். அதை நினைத்து மகிழ்வார் அருணாசலம்.

வயலுக்கு வரும்போது அவர் பல்வேறுவகையான நூல்களை கொண்டுவருவார். வயலில் வேலை செய்வோர் வேலை செய்யும் போது இடையூறுகள் இல்லாமல் கற்கலாம் என்பது அவரது எண்ணம் . அன்று அருணாசலத்தைச் சந்திக்கவந்த அதிபர் தணிகாசலம் சொன்னார், ‘‘நான் பதவி உயர்வுகளுக்காகத் நாள்தோறும் கற்பேன். ஆனால் நீங்கள் மகிழ்ச்சிக்காக நாள்தோறும் கற்கறீர்கள். அதனால் தான் நீங்கள் குற்றமில்லாதவராக வாழ்கிறார்கள். நாள்தோறும் கற்கும் பழக்கம் மிகச் சிறந்தது. இனிமையானது’’ என்றார்.

அவர் சென்றதும் அவரது சகோதரன் வந்து சொன்னான், ‘‘அண்ணா நாவலடிக்கு எனது மனைவியின் சகோதரியின் திருமணவிடயமாகச் செல்ல வேண்டியுள்ளது. உங்களுக்கு அங்குள்ள பெரியவர்கள் யாரையாவது தெரியுமா…..?

‘‘திருமாறா, உள்ளூரில் மட்டுமல்ல தான் செல்லும் ஊர்களிலும் உள்ள பெரியவர்களோடு நட்புக் கொண்டிருத்தல் வேண்டும். நட்பென்பது ஓர் இனிமையான அன்புப்பிணைப்பு. நண்பர்கள் பொய் பேசமாட்டார்கள். உதவி செய்வதையே

குறிக்கோளாகக் கொண்டிருப்பார்கள். நாவலடியில் பொன்னம்பலம் ஆசிரியர் இருக்கிறார். தர்மரத்தினம் என்ற பெரியவர் இருக்கிறார். கந்தசாமியென்ற விவசாயி இருக்கிறார்….'' என்று அருணாசலம் கூறும் போது திருமாறன் குறுக்கிட்டுச் சொன்னான், ''கந்தசாமியின் மகன் செந்தூரனை காப்பாற்றித் தான் விசாரிக்கவேண்டும்''

''நல்லகுடும்பம். நீ சென்று பொன்னம்பலத்தைக்கேள் என்றார் அருணாசலம்.

''நீங்கள் சொன்னால் பிறகு எதற்கு'' என்றான் திருமாறன்.

'' இல்லை, திருமணவிஷயம் நன்கு ஆராயவேண்டும்'' என்றார் அருணாசலம்.

**4. யானை யுடைய படைகாண்டல் முன் இனிதே**
**ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்காமை முன் இனிதே**
**கான்யாற்(று) அடைகரை ஊர் இனி(து) ஆங்கினிதே**
**மான முடையார் மதிப்பு**

யானைகளுடைய சேனையை அமைக்கும் அரசனது வாழ்வு இனிது. பிற உயிர்களைக் கொன்று அதன் தசையை உண்ணாமை இனிது. ஆறுகள் உள்ள ஊரில் வாழுதல் இனிது. மானமுள்ளவராக வாழுதல் இனிது

அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு கடவுளை வணங்கியபின் அருணாசலமும் அவரது மனைவி கலைமகளும் வேப்பமரநிழலுக்கு வந்த போது நிலத்தில் குந்தியிருந்த இருவர் எழுந்து தோளில் இருந்த சால்வையைக் கையில் எடுத்துவிட்டு அவரை வணங்கினர்.

அவர்கள் ஊரவர்கள் அல்ல என்பதை அவர் புரிந்து கொண்டார்.

“ஐயா, நாம் இருவரும் நெடுந்தூரத்தில் உள்ள மணல்வேலி என்ற கிராமத்தவர்கள். எமது கிராமத்தில் கடந்த ஒருவருடகாலமாக மழைபெய்யவில்லை. அதனால் நீர் நிலைகள் யாவும் வற்றி விட்டன. மிருகங்கள் நீரில்லாததால் இறக்கின்றன. யானைப்படையுள்ள அரசனின் பலத்தை உயர்த்தும். எதிரிகளை அஞ்சவைக்கும். அரசனுக்குப் பெரும்பெயரையும் புகழையும் உண்டாக்கும். ஆனால் நீரில்லாவிட்டால் பெரும் செல்வமும் யானைப் படையும் உள்ள அரசனானாலும் பலவீனமடைந்து விடுவான். அத்துடன் ஆறில்லாத ஊர் பாழ்பட்ட ஊர் என்பர். எமது ஊரில் ஆறு இல்லை. இந்த ஊரில் ஆறுகள் உண்டு. அதனால் குளங்கள் நிறைந்துள்ளன. வருடம் முழுவதும் பயிர் செய்யப்படுகிறது. அத்துடன் நீங்கள் நல்லவர், இரக்கசுபாவமுள்ளவர், ஏழைகளுக்கு உதவிகள் செய்பவர் என்றும் உறுதியான மனம் படைத்தவர் என்றும் கேள்விப்பட்டு வந்தோம். நாம் இருக்க வரவில்லை. வேலைதேடிவந்தோம். எனவே எமக்கு வேலை தாருங்கள். நாம் பிறிதோர் உயிரைக்கொன்று எமது தசையை வளர்ப்பவர்கள் அல்ல. அதனால் தான் இங்கு வந்தோம்” என்றான்.

“உனது குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?” என்று கேட்டார் அருணாசலம்.

“இவன் எனது மைத்துனன். எனக்கு ஐந்து சகோதரர்கள். பெற்றோரும் இருக்கிறார்கள்…..” என்று சொல்லும் போது அருணாசலம் குறுக்கிட்டுச் சொன்னார், “ நீ

உனது ஊருக்குச்சென்று உனது குடும்பத்தினரை அழைத்து வா. உங்களுக்குக் குடியிருக்க வீடும் நிலமும் தருகிறேன். ஒழுக்கமாக வாழவேண்டும்''.

''நாங்கள் ஒழுக்கமாகவும், விசுவாசமாகவும் வாழ்வோம். மிகவும் நன்றி ஐயா'' என்று கூறிவிட்டுச் சென்றனர்.

**5. கொல்லாமை முன்இனிது கோல்கோடி மாராயம்**
**செய்யாமை முன்இனிது செங்கோலன் ஆகுதல்**
**எய்தும் திறத்தால் இனிதென்ப யார்மட்டும்**
**பொல்லாங்(கு) உரையாமை நன்கு**

ஓர் உயிரைக் கொல்லாமை மிக இனிது. அரசன் பக்கச்சார்பின்றித் தீர்ப்பளித்தல் மிகவும் இனிது. அவன்முறைப்படி ஆழ்தல் அதனிலும் இனிது. எவரிடமும் குற்றம் காணாதிருத்தல் இனிது.

கலைமகள் எல்லோரிடத்தும் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்வாள். அதனால் ஊரவர்கள் அச்சமின்றி அவளுடன் பழகுவார்கள். அவள் எல்லோரும் கூறுவதைப் பொறுமையாகக் கேட்பாள். சிலர் அருணாசலத்திடம் தம் பிரச்சினைகளைக் கூறுவதை விடக் கலைமகளிடமே கூறவிரும்புவர். அருணாசலத்திடம் கூறினால் உடனே உதவி கிடைக்கும். ஆனால் கலைமகளிடம் கூறினால் உதவி கிடைக்கத் தாமதமாகும். அவள் தரதர கணவனுக்கு அது பற்றிக் கூறியபடி தான் நடந்து கொள்வாள்.

அருணாசலத்தின் பின்னணியில் வேலைசெய்யும் முருகையா என்பவன் அடுத்த வீட்டுக்காரனின் ஆட்டுக்கடாயைத் திருடிவிட்டான் என்று அடுத்த வீட்டுக்காரன் அருணாசலத்திடம் முறையிட்டான். அருணாசலம் முருகையாவை அழைத்துச் சொன்னார், ''முருகையா, மனிதராக உலாவும் எல்லோருக்கும்

பல பிறப்புக்கள் உண்டு. இப்போதுள்ளவர்கள் முன்பும் பிறந்திருப்பார்கள். இறந்தபின்பும் பிறப்பார்கள். நாம் ஒரு பிறப்பில் செய்யும் பாவ புண்ணியங்களுக்கேற்பத் தான் அடுத்த பிறப்பில் இன்பதுன்பங்கள் உண்டாகின்றன. நாம் ஆடாகப் பிறந்திருந்தால் எம்மைப்பிடித்து வெட்டினால் எப்படி இருக்கும்? அதனால் தான் ஓர் உயிரைக் கொல்லாமல் வாழுதல் மிகவும் இனியதாகுமென்று பெரியவர்கள் கூறியுள்ளனர் அதுபோலப் பொய்பேசாமல் வாழ்வதும் இனிமையானது. உண்மையைச் சொல். நான் உன்னைக் காட்டிக் கொடுக்கவோ, நட்ட ஈடுகொடுக்கவோ சொல்ல மாட்டேன். களவெடுப்பதை விடப் பொய்சொல்வது தான் பாவம்'' என்றார்.

சிறிது நேரம் பேசாதிருந்த முருகையா, அவரின் கால்களைப் பிடித்தவாறு சொன்னான்,'' நான் தான் திருடி ...................... விற்று விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இனி மேல் நான் அல்லாது நடக்கமாட்டேன்'' என்று அழுதான்.

‘‘நீ அவனிடம் வாங்கிய பணத்தைச் செலவு செய்யாதிருப்பாய். நான் அந்தப்பணத்தைத் தருகிறேன். நீ விற்றவனிடம் கொடுத்து ஆட்டை வாங்கிவந்து பிடித்த இடத்தில் விடு'' என்றார் அருணாசலம்.

மறுநாட்காலை ஆடு தொலைத்தவன் மிகவும் மகிழ்வுடன் வந்து அருணாசலத்திற்குச் சொன்னான், ‘‘ஐயா, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நேற்று எனது ஆடு வழி மாறிச் சென்று விட்டது. இன்று திரும்பி எமது ஆட்டு மந்தையுடன் வந்து விட்டது. நீங்கள் தருமாவன். உங்களிடம் வேலை செய்வோருக்கு நீங்கள் எந்தக் குறையும்

வைத்ததில்லை. பாகுபாடு காட்டுவதில்லை, பக்கம் சார்வதில்லை, கொடுப்பனவுகளில் வித்தியாசம் காட்டுவதில்லை. அப்படி வாழ்வது மகிழ்ச்சியானது. அது உங்களுக்கு மட்டும் மகிழ்ச்சியானதல்ல, உங்களிடம் வேலை செய்வோர், இக்கிராமத்தில் வாழ்வோர் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருவது. அத்துடன் நீங்கள் யாரையும் குறை கூறியதில்லை. அன்பாக எடுத்துச் சொல்வீர்கள். அந்தப்பண்பு என்னைக் கவர்ந்ததால் தான் நான் உங்களிடம் வந்து மன்னிப்புக் கோருகிறேன்'' என்றான்.

**6. ஆற்றும் துணையால் அறஞ்செய்கை முன் இனிதே**
**பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே**
**வாய்ப்புடைய ராகி வலவைகள் இல்லாரைக்**
**காப்படையக் கோடல் இனிது.**

சந்தர்பமேற்படும் போதெல்லாம் தருமம் செய்வது மிக இனிது. மாட்சிமையுடையவர்களின் வாய்ச் சொல் இனிது. எல்லா நலன்களையுமுடைய சன்றோரின் துணை இனிது.

மணல்வேலி என்ற கிராமத்தில் இருந்து வந்த இருவரும் தமது குடும்பத்தவர்களுடனும் தமது உடைமைகளுடனும் அருணாசலத்தின் வீட்டுக்கு வந்தனர். அருணாசலம் அவர்களுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் கொடுத்தார். அவர்கள் தங்குவதற்கு வீடுகளும் கொடுத்தார். அவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட வீட்டில் சென்று வேலைகளைக் கவனிப்பதால் அவர்களுக்கு உணவும் கொடுத்தார். வந்தவன் ஒருவன் சொன்னான், ''ஐயாவை நம்பி வந்த எவரும் வெறுங்கையுடன் சென்றதில்லை என்று எமது ஊரவர்கள் கூறுவார்கள். அது உண்மையென இன்று கண்டு கொண்டோம். நீங்கள் எந்தவிதக் குறைகளும் இல்லாமல் சகல

செல்வங்களுடன் வாழ்ந்தால் தான் எம்போன்ற ஏழைகள் வாழ்வார்'' என்றான். அவனது விழிகள் கலங்கியிருந்தன.

“ஊரவன் ஒருவன் சொன்னான், உங்களைக் காண்பது இனிது. உங்கள் சொற்கேட்பது இனிது. உங்களுடன் பழகுவது இனிது. உங்கள் பாதுகாப்பில் நாம் வாழ்வது இனிது'' என்றான்.

அருணாசலம் தரதர வேலையாள் ஒருவனை அழைத்துச் சொன்னார், “ இவர்களை அழைத்துச் சென்று வாழைத் தோப்பிலுள்ள வீட்டில் விடு. இவர்கள் சமைப்பதற்குப் பாத்திரங்களும் சமையற் பொருட்களும் கொடு. பக்கத்தில் உள்ள கடைக்காரனுக்கு இவர்களை அறிமுகம் செய்து வை. பணம் கொடுக்காவிட்டாலும் பொருட்களைக் கடனாகக் கொடுக்கச்சொல். அத்துடன் வாழைத்தோப்பில் இவர்களுக்கு வேலை கொடு''

வேலையாள் அவர்களை அழைத்துச் சென்றான்.

7. **அந்தணர் ஒத்துடைமை ஆற்ற மிக இனிதே**
**பந்தம் உடையான் படையாண்மை முன் இனிதே**
**தந்தையே ஆயினும் தானடங்கான் ஆகுமேல்**
**கொண்டடையான் ஆகல் இனிது.**

வேதத்தை மறவாமை அந்தணர்களுக்கு இனிது. குடும்பத்தில் பற்றுடையவன் அக்குடும்பத்தை ஆளுதல் இனிது. தந்தையானாலும் தீய வழியில் நடந்தால் அவனை விலக்குதல் இனிது.

நம்பிவாயக்குருக்கள் சிவனுக்குப் பூசை செய்தால் சிவன் நேரில் தோன்றுவது போல இருக்கும். அவர் மந்திரமோதினால் பக்தர்கள் அனைவரும் கண்களை மூடி மெய்மறந்திருப்பர். அவர் சோதிடம் சொல்வார். பிணிகள்

தீர்ப்பார். கழிப்புக்கள் கழிப்பார். வேள்வி டிசெய்வார். அவரின் வாய்ச்சொல்பிழைக்காது என்று அவ்வூர் மக்கள் நம்பியிருந்தனர். அன்று பௌர்ணமி தினம். மக்கள் சிவன் கோயிலில் கூடியிருந்தனர்.அருணாசலம் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் மகேஸ்வர பூசை செய்வார். அன்று இன்னொரு குருக்கள் மந்திரமோதிக் கொண்டிருந்தார். நமசிவாயக்குருக்களுக்கு நான்கு நாட்களாகக் காய்ச்சல். அதனால் அவரின் தொண்டை கட்டியிருந்தது. அதனால் நிர்வாகத்தினர் இன்னொருகுருக்களை ஒழுங்கு செய்திருந்தனர். அவர் கூறும் மந்திரங்களில் அட்சரசுத்தமில்லாதிருந்தது. இடைக்கிடை அவர் தடுமாறினார். அதனால் அருணாசலமும் மக்களும் சலிப்படைந்தனர்.

புதிதாக வந்த குருக்கள் மெதுவாக மந்திரங்களைத் தட்டுத்தடுமாறிச் சொல்வது நமசிவாயக்குருக்களின் காதுகளில் நாக அஷ்திரமாக நுழைந்து துன்பத்தைக் கொடுத்தது. அதனால் நமசிவாயக் குருக்கள் மந்திரம் சொல்லத் தொடங்கினார். அவரது வருத்தம் பறந்துவிட்டது. மந்திரங்கள் இனிமையாகி மக்களின் காதுகளில் புகுந்து ஓர் எழுச்சியையும் மகிழ்ச்சியையும் கொடுத்தன.

“அந்தணர்கள் வேதத்தை முறைப்படி ஓதுவதும் தடைப்படாது ஓதுவம் மிகவும் இனிமையானது. அப்படி ஓதுவதைக் கேட்பதும் இனிமையானது” என்றார் அருணாசலம்.

மணியூரில் இருந்து வந்த மாதவன் ஒழுங்கானவன், ஒழுக்கமானவன். குடும்பத்தைத் தன் உயிரிலும் மேலாக நேசிப்பவன் என்பதை அவன் வந்து குடியேறிய இரண்டொரு நாளில் அருணாசலம் புரிந்து கொண்டார். அவனது பொறுப்பில் அவனுடன் வந்த அவனது சகோதரர்களும் வாழ்ந்து வந்தனர்.

எல்லாமாக ஐம்பத்தொரு பேர் அவனது பாதுகாப்பில் இருந்தனர். அவர்கள் அனைவரும் அன்று கோயிலுருக்கு வந்திருந்தனர். மாதவனின் தலைமையில் அவர்கள் கோயிற் பணிகளைச் செய்தனர். அவனது தலைமை தாங்கும் பண்பையும், அதனால் அவர்களது குடும்பம் செயற்படும் முறையையும் கண்டு அருணாசலம் மகிழ்ந்தார். குடும்பப்பற்றுள்ளவன், தரதர குடும்பத்தின் முன்னேற்றத்திற்காகத் தன்னலமில்லாது செயற்படுவது மிகவும் இனியது என்று மாதவன் உணர்ந்தமையால் தான் அப்படி நடக்கிறான்'' என்று நினைத்தார். மாதவனின் தந்தை அங்கு வந்து குடியேறி இரண்டு நாட்கள் அமைதியாக இருந்தார். பின்பு அவ்வூரின் எல்லையில் உள்ள கள்ளு விற்கும் தவறணைக்குச் சென்று கள்ளருந்திவிட்டுத் தீயவர்களுடன் சேர்ந்து குழப்பங்கள் செய்தார். அந்த விடயம் அருணாசலத்திற்குத் தெரிய வந்தது. அவர் மாதவனுடன் அது பற்றிக் கதைக்க எண்ணியிருந்தார். அவன் தரதர சொந்த ஊருக்குச் சென்று விட்டதாக அவனது மனைவி சொன்னாள்.

மறுநாள் அருணாசலத்திடம் வந்து மாதவன் சொன்னான், ''ஐயா, தந்தையானாலும் தீயசெயல்களில் ஈடுபட்டால் அவரை விலக்கி வைத்தல் வேண்டும். அதனால் அவரை அழைத்துச் சென்று அவரது சகோதரியின் வீட்டில் விட்டுவிட்டு வந்துள்ளேன். அவரை இங்கு வரக்கூடாதென்று எச்சரிக்கையும் செய்துள்ளேன். பெற்றகடனுக்குச் செலவைக் கொடுப்போம்'' என்றான் மாதவன்.

''பெற்ற தந்தையாானாலும் தீய செயல்களைச் செய்தால் அவரை விலக்கி வைத்தல் இனிது'' என்று பெரியவர்கள்

கூறியதை மாதவன் படித்திருக்கிறான்''. என்று நினைத்தார் அருணாசலம்.

8. **ஊருங் கலிமா உரனுடைமை முன் இனிதே**
**தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்**
**கார்வரை யானைக் கதங்காண்டல் இன் இனிதே**
**ஆர்வம் உடையவர் ஆற்றவும் நல்லவை**
**பேதுறார் கேட்டல் இனிது.**

தான் ஏறிச் செல்லும் போர்க்குதிரை வலிமையாக இருப்பது இனிது. போர்க்களத்தில் மலையைப் போன்ற யானைகள் மோதுவதைப் பார்த்தால் இனிது. மிகவும் அன்புடையவர் அறிவான விடயங்களை வினாவுதல் இனிது.

மாலைவேளைகளில் மாதவனும் அவனது மனைவியும் அருணாசலத்தின் வீட்டுக்கு வந்து உதவிகள் செய்வார்கள். மாதவனின் மனைவி தாட்சாயினி மிகவும் நல்லவள். அவளுக்குக் கலைமகளுடன் பேசுவது பழகுவது மிகவும் பிடிக்கும். அதனால் வாழைத்தோப்பில் வேலைகள் முடிந்ததும் அருணாசலத்தின் வீட்டுக்கு வந்து விடுவார்கள். தாட்சாயினியின் நடத்தை கலைமகளை மிகவும் கவர்ந்ததால் பகல் வேளையிலும் வந்து தனக்குதவி செய்யுமாறு கூறுவாள். அதனால் நாளடைவில் மாதவனும் தாட்சாயினியும் அருணாசலத்தின் குடும்ப உறுப்பினர்களாகி விட்டனர்.

மாதவன், எப்போதும் அருணாசலத்துடன் கூட இருந்து அவரிடும் வேலைகளைச் செய்வான். இன்று இரவு அருணாசலம் ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். மாதவன் கீழே அமர்ந்திருந்தான். அவர் வாசிப்பதை மாதவனுக்கு விளக்கிக் கூறுவார். மாதவன் ஊர்ப் புதினங்களைக் கூறுவான்.

“மாதவா மனிதர்கள் தம்மிலும் பார்க்க வலிமையுடையவர்களுடனும் அறிவுள்ளவர்களுடனும் தொடர்பு வைத்திருத்தல் வேண்டும். வலிமை தான் எல்லாவற்றையும் பெற்றுத் தரும். ஓர் அரசன் தான் ஏறிச் செல்லும் குதிரை வலிமையுடையதாக இருந்தால் தான் அவனும் வலிமையுடையவனாக இருப்பான். தான் வலிமையுடையவனாக இருந்து ஏறிச் செல்லும் குதிரை வலிமையற்றதாக இருந்தால் எதிரிகள் வென்று விடுவார்கள். அதுபோல யானைப் படையும் வலிமையானது. யானைகள் மோதிக் கொள்வதைப்பார்ப்பது மிகமிக இனிமையானது. வவலிமை உள்ள யானைகள் உக்கிரமாக மோதும். கோட்டைகளையும், பலத்த பாதுகாப்பு அரணையும் தகர்க்கும். அதனால் உயிர்வாழ்வதற்கு வலிமை தேவை. அதை நீ பெற்றுக் கொள்ளல் வேண்டும்”. என்றார் அருணாசலம்.

“உண்மை தான் ஐயா, நான் முன்பு வலிமையில்லாது இருந்தேன். யானையைப் போல வலிமை உள்ள உங்களுடன் சேர்ந்த பின்பு எனது வலிமை அதிகரித்துள்ளது. உங்கள் வீட்டில் வேலை செய்வதாலும் , நீங்கள் என்னுடன் அன்புடன் பழகுவதாலும் ஊரவர்களும் , பிரமுகர்களும், வேலை செய்வோரும் என்னை மதிக்கின்றனர். சந்தன மரத்தின் அருகில் நிற்கும் வேறு நேரங்களும் சந்தணவாசம் வீசும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோல உங்களோடு சேர்ந்த பின் தீய சிந்தனைகள் எனது மனதில் எழுவதில்லை. அத்துடன் எல்லோருக்கும் நல்லவராக உங்களால் எப்படி வாழமுடிகிறது?” என்று கேட்டான் மாதவன்.

“நல்லவர்களுடன் வாழ்தல் இனிது. நல்லவர்களின் வாய்ச் சொல் இனிது. நல்ல கேள்விகளைக் கேட்கின்ற

அன்புள்ளவர்களது வார்த்தை இனிது'' என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அது உண்மை'' என்று நினைத்தார் அருணாசலம்.

**9. தங்கண் அமர்புடையார் தாம் வாழ்தல் முன் இனிதே**
**அங்கண் விசும்பின் அகல்நிலாக் காண்பினிதே**
**பங்கமில் செய்கையராகிப் பரிந்து பார்க்கும்**
**அன்புடைய ராதல் இனிது.**

தம்மையடுத்து ஒட்டி வாழ்பவர்கள் மகிழ்வுடன் வாழுதல் இனிது. அகன்ற வானத்தில் முழுநிலாவைக் காணுதல் இனிது. மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாது யாவரோடும் இணங்கி அன்போடும் ஒற்றுமையோடும் வாழ்தல் இனிது.

''மாதவா, என்னோடு நெருங்கிப் பழகுவோர் என்னைப் பெரிதாக மதிப்பதை நான் விரும்பவில்லை. மற்றவர்களைப் போலச் சாதாரணமாக நினைத்து என்னுடன் அன்பாக கண்டிக்கும் நேரத்தில் கண்டித்து நட்புரிமை கொண்டு பழகுவதையே நான் விரும்புகிறேன். எல்லோரும் அரிய ஒரு பொருளைப் பார்ப்பது போலப் பார்ப்பதையும் பேசுவதையும் நான் விரும்பவில்லை. இந்தவகையில் நீ என்னுடன் அன்பாகப் பழகுகிறாய். கேள்விகள் கேட்கிறாய். ஆலோசனைகள் வழங்குகிறாய். அது எனக்கு மிகவும் பிடித்துள்ளது. நானும் இன்பமாக வாழ வேண்டும், என்னோடு கூட இருப்பவர்கள், எனது இனத்தவர்கள், எனது தொழிலாளர்கள் என்னை நம்பியுள்ளவர்கள் அனைவரும் இன்பமாக வாழ வேண்டும் என்று நினைப்பவன் நான். அதனால் தான் என்னால் மகிழ்ச்சியாக வாழ முடிகிறது. மற்றவர்கள் வசதியாக, இன்பமாக வாழக் கூடாதென்று நினைப்பவன் தானும் மகிழ்ச்சியாக வாழமாட்டான். ஏனென்றால் அவனது நினைவு

பொறாமையாகித் தன்னையே படிப்படியாக அழித்துவிடும். இன்று பௌர்ணமி தினம் . தெளிந்த வானத்தில் பூரண சந்திரன் உலாவுகின்றான் இது மனதிற்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. மனிதன் இயற்கையை ரசிக்கப் பழகுதல் வேண்டும். இயற்கையை நேசித்தல் வேண்டும். அப்படி வாழ்ந்தான் துன்பங்கள் வரமாட்டாது. பூரண நிலவை விரும்பாதவர்கள் யார்? குழந்தைகள் குதூகலிப்பார்கள். காதலர்கள் இன்பமடைவார்கள். குடும்பத்தவர்கள் குதூகலிப்பார்கள். பொதுவாகச் சொன்னால் எல்லோருக்கும் பூரண நிலவு இன்பத்தைக் கொடுக்கவல்லது. நிலவின் ஒளியைப் போலக்களங்கமில்லாது இருத்தல் வேண்டும். யாவரையும் சமமாக மதித்தல் வேண்டும். விதிவசத்தால் வறுமைப்பட்டவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். மற்றவர்கள் துன்பப்படும் போது நாம் இரங்கி உதவி செய்தல் வேண்டும். இப்படி வாழ்ந்தால் சுற்றம் பெருகும். எல்லோரும் அன்புடையவர்களாவார்கள்'' என்றார் அருணாசலம்.

**10. கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே**
**நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே**
**மனமாண்(பு) இலாதவரை அஞ்சி அகறல்**
**எனைமாண்பும் தான் இனிது நன்கு**

கடன் வாங்கி வாழாதிருத்தல் இனிது. கற்பு நெறி தவறிய மகளிரை விலக்கி விடுதல் இனிது. மனதில் வஞ்சகமுள்ளவர்களை விலக்கிவிடுதல் மிகமிக இனிது.

''ஐயா, நாளைக்கு நான் ஊருக்குச் செல்லுதல் வேண்டும்'' என்றான் மாதவன்.

“உனது தந்தையைப் பார்க்கப் போகிறாயா…? எத்தனை நாட்களில் திரும்புவாய்?” என்று கேட்டார் அருணாசலம்.

“அப்பாவைப் பார்க்கத் தேவையில்லை. அவருக்குப் பணம் கொடுத்தால்போதும். நேற்று வந்தவர். கொடுத்துவிட்டேன். ஊரில் மழையில்லாததால் தொழில்கள் இல்லை. அதனால் கடன்பட்டேன். மாதா மாதம் வட்டிப்பணம் கொடுத்தல் வேண்டும். நான் மிகவும் நேர்மையாக வாழ்ந்து பழகியமையால் மிகவும் கஷ்ட்டப்படுகிறேன். உரியதினத்தில் வட்டிப்பணம் கொடுத்தல் வேண்டும். உழைப்பதெல்லாம் வட்டி கட்டப்போதாது. கடன் படாது கஞ்சி குடித்து வாழ்ந்தாலும் அது பெரும் நிம்மதி மட்டுமல்ல மகிழ்ச்சியும்” என்றான் மாதவன். “உனது கடனை நான் தீர்க்கிறேன். எவ்வளவென்று சொல்” என்றார் அருணாசலம்.

“ மூவாயிரம் ’ரூபா. மாதாமாதம் எனது சம்பளத்தில் கழியுங்கள்” என்றான் மாதவன்.

“வேண்டாம்” என்றார் அருணாசலம்.

மாதவன் திகைத்துப்போனான். அப்போது அந்த ஊரில் மதிப்போடு வாழும் மகேஸ்வரன் அங்கு வந்தான். அவனது முகம் கலவரமடைந்திருந்தது. அவனது மனைவி இன்னோர் குடும்பத்தவருடன் தொடர்புவைத்திருப்பதாகவும் அதனால் இருகுடும்பங்களுக்கிடையிலும் பெரும் சண்டை சச்சரவுகள் நடைபெறுவதாகவும் மாதவன் அவருக்கு ஏற்கனவே சொல்லியிருந்தான்.

“நீ ஏற்கனவே உனது பிரச்சினைகள் யாவும் கூறியிருக்கிறாய். வேறு குற்றங்கள் செய்தால் மன்னிக்கலாம். இதைக் கடைசிவரையும் மன்னிக்கமுடியாது. அவளை விட்டுவிடு” என்றார் அருணாசலம்.

“அந்த முடிவை உங்களுக்குச் சொல்லத்தான் நான் வந்தேன். நான்கூறு முன்பே அதைக்கூறி விட்டீர்கள் என்றார் மகேஸ்வரன்.

“கற்பில் மாட்சிமை இல்லாத மனைவியை விலக்கிவிடுதல் இனிது. மனதில் களங்கமுள்ளவர்களையும் பழிக்கு அஞ்சி விலக்கிவைத்தல் எல்லா மாட்சிமையிலும் சிறந்தது. கற்பென்பது மனஉறுதியில்லாதவர்கள் பழி பாவங்களுக்கு அஞ்சமாட்டார்கள். அதனால் எவ்வளவு தான் முக்கியமானவராக இருந்தாலும் அவரை விலக்கி வைக்கவேண்டும். ஏனென்றால் அவர்களால் பெரும்பழி பாவங்கள் யாவும் வந்து சேரும்” என்றார் அருணாசலம்.

**11. அதர்சென்று வாழாமை ஆற்ற இனிதே**
**குதர்சென்று கொள்ளாத கூர்மை இனிதே**
**உயிர்சென்று தான் படினும் உண்ணார்கைத் துண்ணாய்**
**பெருமைபோல் பீடுடையது இல்.**

ஊரூராய் சென்று இரந்து வாழாதிருந்தால் இனிது. தீயவழியில் நூலுக்குப் பொருள் சொல்லாத மதி நுட்பம் இனிது. பசியால் இறப்பு நேரிட்டாலும் உன்னைத்தகாதவரின் வீட்டில் உணவு உண்ணாமை இனிது. அது போன்ற பெருமை வேறெதிலும் இல்லை.

“ஐயா, நான் ஊருக்குச் சென்றதால் துன்பம் தான் ஏற்பட்டது. எனது தங்கையின் கணவன் ஒருசோம்பேறி. எமது

ஊர் வளமாக இருந்தபோதே உழைக்கச் சோம்பற்படுவன். நாம் தாம் உதவி செய்வோம். இப்போ அங்கு அவளுக்கு உதவி செய்ய யாரும் இல்லை. ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுத்து வாழ்கிறான். பிச்சை எடுப்பது அவமானம். உழைக்கக்கூடிய வலு உள்ளவன் பிச்சை எடுக்கக் கூடாது. என்னுடன் வா நான் ஐயாவிடஞ் சொல்லி வேலை பெற்றுத்தருகிறேன் என்றேன். அதைக்கேளாது பிச்சை எடுக்கிறான். அதைப்பார்க்க அவமானமாக இருக்கிறது. பிச்சை எடுக்காது உழைத்து வாழ்வது தான் மகிழ்ச்சியானது என்பதை உணர்கிறானில்லை'' என்று அழுதான் மாதவன்.

''அதைவிடக் கொடுமையானது எனது சகோதரன் ஒருவன் கற்றவன். ஆசிரியராகக் கடமை புரிகிறான். அவன் தவறான வழியில் நூல்களைக் கற்பித்துப் பணம் பெறுகிறான். கற்றவர்கள் தவறாக நடக்கக்கூடாது. அதைவிடத் தாம் கற்ற கல்வியைக் கொண்டு தவறான வழிகளில் பொருள் தேடக்கூடாது. ஆசிரியர்கள் பிரத்தியோக வகுப்புக்களைப் பணத்திற்காக நடத்துவது பாவம் என்று அவர்களுக்குத் தெரியவில்லையே. கற்றவர்கள் நல்லவற்றிற்கு மட்டும் கல்வியைப் பயன்படுத்தினால் மட்டும் தான் இன்பமாக வாழலாம்'' என்றான் மாதவன் .

''ஐயா, பசியால் இறக்கக்கூடிய நிலை ஏற்பட்டாலும் உண்ணக்கூடாதவரின் வீட்டில் உணவு பெற்று உண்பது பாவம். அந்த நிலை எனக்கேற்பட்டால் நான் உயிரை விடுவேனே தவிர உண்ணக் கூடாதவனிடம் கையேந்தி உண்ணமாட்டேன். அந்நிலையில் உயிர் போவது இனிமையானது என்று நினைப்பவன் நான். ஆனால் எனது மைத்துனனும் மகனும் பிச்சை எடுக்கிறார்கள். பிச்சை எடுக்கும்போது உன்னைத்

தகாதவர்களின் வீட்டுக்குச் சென்று பிச்சை கேட்கிறார்கள். எமது ஊரில் ஒரு சண்டாளன் இருக்கிறான். அவனின் வீட்டிற்கு இவர்கள் வாங்கி உண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஊரவர் கேலியாகக் கதைத்துச் சிரிக்கிறார்கள். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்று அழுதான் மாதவன்.

12. **குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே**
**கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே**
**மயரிகள் அல்லராய் மாண்புடையார்ச் சேரும்**
**திருவும்தீர் வின்றேல் இனிது.**

குழந்தைகளின் நோயின்றி வாழ்தல் இனிது. சபைக்கு அஞ்சாதவனின் கல்வி இனிது. கொடுத்துதவும் மாண்புடையாரை அடைந்து அவரை விட்டு நீங்காது இருக்கும் செல்வமும் இனியது''

மாதவனின் இரண்டாவது ஆண்குழந்தைக்கு இன்னும் ஒரு வயது முடியவில்லை. திடீரென்று அது அழ ஆரம்பித்தது. மாதவனின் மனைவி தாட்சாயனி தனக்குத் தெரிந்த கை மருத்துவம் யாவும் செய்து பார்த்தாள். குழந்தையின் அழுகை அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. அதனால் அக்குழந்தையை ஊரில் உள்ள வைத்தியரிடங் கொண்டு சென்றனர். அவர் குழந்தையைப் பரிசீலித்து விட்டுச் சொன்னார், இது விபரம் தெரிந்தவரானால் தரதர வாயால் தனக்கிருக்கும் நோயைச் சொல்வாள். என்னிடம் குழந்தையைப் பரீட்சிக்கும் உபகரணங்கள் இல்லை. அரசவைத்திய சாலைக்குக் கொண்டு செல்லுங்கள்'' என்றார்.

மாதவன் அரசவைத்தியசாலைக்குத் தரதர பிள்ளையைக் கொண்டு சென்றபோது அது உணர்வை இழந்திருந்தது. அதனால் வைத்தியர் அதை பட்டணத்தில் உள்ள பிரதான மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். பெரிய

வைத்தியசாலையில் பல வைத்தியர்கள் உன்று கூடிப் பரீட்சித்தனர். பல்வேறு வகையான கருவிகள் மூலம் பரிசோதனை செய்தனர். கண்விழித்த குழந்தை அழத் தொடங்கியது.

குழந்தையைப் பார்க்க அருணாசலம் வைத்தியசாலைக்கு வந்தார். குழந்தை அகப்படாததால் அவர் கவலையுடன் சொன்னார், “குழந்தைகள் நோயில்லாமல் வாழ்வது இனிது. குழந்தைகளுக்கு நோயுண்டானால் கண்டுபிடிப்பது பெரும் சிரமம். சிவனைத் தொழுங்கள்” என்றார்.

மூன்று தினங்களின் பின் மாதவனது குழந்தை பூரண சுகமடைந்தது.

அன்று சிவன் கோயில் மண்டபத்தில் அறிஞர்கள் கூடியிருந்தனர். அருணாசலத்தின் சகோதரன் வேதாச்சலம். ஆசிரியராகக் கடமைபுரிந்தான். மெய்யுணர்வைத்தரும் நூல்கள் பலவற்றை அவன் குற்றமில்லாமற் கற்றவன். அதனால் ஊர்ப்பெரியவர்களும் அயலூர்ப் பெரியவர்களும் அவனைத் தேடிவந்து தமக்குள்ள ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைவர். அவன்பேசினால் சபை நிறைந்திருக்கும். அன்று அவன் பேசிக்கொண்டிருந்தான். சபையில் இருந்த அத்தனை பேரும் அமைதியாக இருந்து கேட்டுக்கொண்டிருந்தனர். அவன்பேசி முடிந்ததும் அயலூர் அறிஞர் ஒருவர் சொன்னார், சபைக்கு அஞ்சாதவன் கற்ற கல்வி இனிமையானது. அதனால் தான் மக்கள் மெய் மறந்திருந்தனர்” என்றார். அதைக்கேட்ட அருணாசலம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

“அருணாசலம் ஐயா, உங்கள் சகோதரனின் பேச்சு இனிமையானது. அதைவிட மயக்கமில்லாத மாண்புடைய

உங்களை அடைந்து நீங்காதிருந்து ஊர்மக்களை வாழவைக்கும் உங்கள் செல்வம் பெருமையானது, இனிமையானது, களங்கமற்றது'' என்று ஊர்ப்பிரமுகர் ஒருவர் சொன்னார்.

**13. மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே**
**தானம் அழியாமைத் தானடங்கி வாழ்வினிதே**
**ஊனம் ஒன் றின்றி உயர்ந்த பொருளுடைமை**
**மானிடவர்க் கெல்லாம் இனிது.**

மானமிழந்த பின்பு உயிர் வாழாமை மிக இனிது. தன்னடக்கத்துடன் பெருவாழ்வு வாழ்வது இனிது. எவ்விதமான குறைகளும் இல்லாது மிக்க பொருளுடையராக வாழ்தல் எல்லா மக்களுக்கும் இனிது.

"ஐயா, உங்கள் நண்பர் சிறுத்தொண்டன் தற்கொலை செய்து கொண்டதாகப் பேசிக் கொள்கிறார்கள்'' என்று அவசரமாக ஓடிவந்த மாதவன் அருணாசலத்திற்குப் பதறியபடி சொன்னான்.

"கடவுளே'' என்று அலறிய அருணாசலம் சில கணங்கள் அதிர்ச்சியில் உறைந்திருந்தார். சிறுதொண்டக் நல்ல குடியிற்பிறந்தவர். பெரும்தனவந்தர். ஏழைகளுக்கு உதவுபவர். அவருக்குக் கஜேந்திரன் என்றொரு மகன் இருந்தான். செல்லமாக எந்தக் குறைகளும் இன்றிஅ வன் வழந்தமையால் அவனுக்கு நன்மை தீமைகள் புரிவதில்லை. அவனது வீட்டுக்கு அருகில் இருந்த அருணன் என்பவனோடு அவன் நட்புப் பூண்டிருந்தான். அருணனின் குடும்பம் தீய செயல்கள் அனைத்தையும் அஞ்சாது செய்வது அருணனது தந்தை சிவபாதம் பெருங்குடிகாரன். தந்தை வாங்கிவந்து வைக்கும் மதுபானத்தைத் திருடி அருணன் குடிப்பான். கஜேந்திரனுடன்

நட்பான பின் கஜேந்திரன் வீட்டில் திருடிக்கொண்டுவரும் பணத்தால் இருவரும் மதுவை வாங்கிக் குடித்தனர். அதனால் கஜேந்திரன் பெரும்பாலான வேலைகளில் அருணனது வீட்டிலேயே இருப்பான். அருணனது குடும்பம் மாமிசம் உண்பது. அதனால் கஜேந்திரனும் மாமிசம் உண்ணப் பழகினான். அருணனது தங்கை சௌமியா நல்ல அழகி. அவள் தாயாரின் சொற்படி கஜேந்திரனோடு நெருங்கிப் பழகினாள். அதனால் கர்ப்பமடைந்தாள். அவ்விஷயம் ஊருக்குத் தெரிந்ததும் சிறுத்தொண்டன் தற்கொலை செய்து கொண்டார். இது அருணாசலத்திற்குத் தெரியும், ‘‘மானமுள்ள குடும்பத்தில் பிறந்தவர்கள் தம் பெருமை கெட்ட பின் உயிர் வாழாமை இனிது என்று நினைப்பார்கள். அது தான் சிறுத்தொண்டன் இறக்கக் காரணம்’’ என்று கூறிக் கலங்கினார் அருணாசலம். அத்துடன் சிறுத்தொண்டன் தான் எப்படிப்புகழோடு வாழ்ந்தேனோ அப்படி இறக்கும் வரை புகழுடனும், அடக்கத்துடனும் வாழவேண்டும் என்று விரும்பினார். அப்படி வாழ்வது தான் மகிழ்ச்சியான வாழ்க்கை. அப்படி அவரால் வாழ முடியவில்லையே’’ என்று கலங்கினார் அருணாசலம்.

‘‘யார் சென்று எதைக் கேட்டாலும் கொடுப்பார். அன்பாகப்பேசுவார். மிக்கபொருளுடைய அவர் எல்லா மக்கள் மீதும் இரக்கமும் அன்பும் கொண்டவராக வாழ்ந்தமையால் இந்த ஊர் மக்கள் எல்லோரும் மகிழ்வாக வாழ்ந்தனர். இனிமையான அந்தப்பெரிய மனிதனின் இழப்புச் சாதரணமானதல்ல’’ என்று விம்மினார் அருணாசலம்.

**14. குழவி தளர்நடை காண்டல் இனிதே**
**அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே**
**வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து**
**மனன்அஞ்சான் ஆகல் இனிது.**

குழந்தை தடுமாறியபடி நடப்பதைப் பார்த்தால் பெற்றோருக்கு இனிது. அக்குழந்தையின் மழலைச் சொல் அமிர்தத்திலும் இனிது. விதியின் காரணமாக துன்பம் வந்தபோது மனத் துணிவுடன் அதைத் தாங்குதல் இனிது.

நோய் வாய்ப்பட்டிருந்த மாதவனின் குழந்தை அகப்பட்டு எழுந்து தட்டுத்தடுமாறி நடந்தது. அது தந்தையைக் கண்டதும் தளிர்நடை நடந்து மாதவனை நோக்கி வந்தது. அக் குழந்தை தடுமாறியபடி கைகள் இரண்டையும் மேலே தூக்கியபடி நடந்து வருவதைக் கண்ட மாதவனின் உள்ளம் உவகையால் பூரித்து இனித்தது. அவன் பெரிதாகச் சிரித்தப இரண்டு கைகளையும் முன்னே நீட்டக்குழந்தை தடுமாறியபடி நடந்து வந்தது. குழந்தையின் பின் தற்செயலாக அக்குழந்தை விழுந்தால் அதைத் தடுப்பதற்காக அதன் பின்னால் அவதானமாக வந்தாள் தாட்சாயனி. குழந்தையின் நடைபெற்றோர்க்குத் தேனாக இனித்தது. குழந்தை “அ……ம்……மா….. அ…..ப்…..பா….” என்று மழலை மொழியில் அழைத்தவாறு வந்தது. அவ் அழைப்பு மொழி மாதவனுக்கும் தாட்சாயினிக்கும் அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தது. மாதவன் குழந்தையைத் தூக்கி வைத்திருக்க தாட்சாயினி அதற்கு உணவு ஊட்டினாள்.

“குழந்தையின் நோய்க்காக சிவலிங்கத்திடம் பத்தாயிரம் ரூபா வாங்கினோம். அவன் மாதாமாதம் வட்டிக்காசைத் தரும்படி வந்து சொன்னான். இப்போ அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்?” என்று கேட்டாள் தாட்சாயனி.

“என்ன செய்வது கொடுக்கத்தானே வேண்டும். குடித்து வெறித்து அநாவசியமான செலவுகளைச் செய்வதனால் தான் பட்ட கடனை அடைக்கமுடியாது. எனக்கு வந்த துன்பம் விதி வசத்தால் வந்தது. அதற்கு நான் அஞ்ச மாட்டேன். மாடாய் உழைத்துப்பட்ட கடனைத் தீர்ப்பேன். நீ பயப்படாதே” என்று சிரித்தான் மாதவன்.

**15. பிறன்மனை பின்னோக்காப் பீடின(து) ஆற்ற**
**வறனுழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர் வினிதே**
**மறமன்னர் தங்கடையுள் மாமலைபோல் யானை**
**மதமுழக்கங் கேட்டல் இனிது**.

பிறனொருவனுடைய மனைவியை இச்சையுடன் திரும்பிப் பாராமை இனிது. பயிர்கள் வாடியிருக்கும் போது மழை பெய்தல் இனிது. வீரமுள்ள அரசனின் அரண்மனை வாசலில் யானைகளின் பிளிற்றொலியைக் கேட்டல் இனிது.

மாதவனின் நண்பன் தேவராசாவும் அவனது மனைவி பூரணியும் மாதவனின் வீட்டுக்கு வந்திருந்தனர். மணியூரில் வசதியாக வாழ்பவன் தேவராசா. அவன் மாதவனின் நல்ல நண்பன். அவன் மாதவனைத் தன்னுடன் இருக்கும்படி வற்புறுத்திக் கூறியும் மாதவன் அதை விரும்பவில்லை.

பூரணி ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். ஆனால் நல்ல அழகி. அவளை ஊரில் உள்ள பல ஆடவர்கள் விரும்பினர். அவள் மாதவனை விரும்பினாள். தாட்சாயினி மாதவனின் மாமன் மகள் அவள் பிறந்தன்றே இருபகுதிப் பெற்றோராலும் அவனுக்கென நிட்சயிக்கப்பட்டவள். அதனால் விருத்தெரிந்த காலம் முதல் அவன் அவளைத் தனது மனைவியாக ஏற்றிருந்தான். அதனால் அவன் வேறு பெண்களை ஏறேடுத்துப் பார்பதில்லை. ஒரு நாள் தேவராசா வீட்டில் இல்லாதது தெரியாததால் அவனைத் தேடி மாதவன் அவனது வீட்டுக்குச்

சென்றான். அவனைக் கண்டதும் பூரணியின் முக் சிவந்தது. தான் விரும்பிய அவனோடு கூடியிருக்க விரும்பினாள். அதைத் தெரிந்து கொண்ட மாதவன் அன்றே ஊரைவிட்டு வெளியேறிவிட்டான். அதன் பின் அவன் செல்லாததால் அவனைத் தேடி தேடி தேவராசா வந்திருந்தான். அவனுடன் பூரணியும் வந்திருந்தான். பூரணியைப் பார்க்கவோ அவளுடன் பேசவோ விரும்பாத மாதவன் தாட்சாயினியை அழைத்துச் சொன்னான், ‘‘இன்று எனது நண்பனும் மனைவியும் விருந்தினராக எமது வீட்டுக்கு வந்துள்ளனர். மிகவும் பிரமாதமாகச் சமையல் செய். நான் தேவராசாவை அழைத்துச் சென்று அருணாசலம் ஐயாவுக்கு அறிமுகம் செய்து வைக்கச் சொல்கிறேன்’’ என்றான்.

தேவராசவை அருணாசலத்திற்கு அறிமுகஞ்செய்த பின் அவ்வூரைச் சுற்றிக்காட்டினான். மதியவேளை வந்ததும் தேவராசாவை அழைத்து வந்து உணவு கொடுத்துவிட்டு ஊர்ப்பிரச்சினைகளைக் கதைத்தான். தேவராசா செல்லும் வரை அவன் பூரணியின் பக்கம் திரும்பவில்லை’’ பாவங்களில் கொடிய பாவம் பிறன் மனைவியை விரும்புவது. சிறப்புக்களிலெல்லாம் பெருஞ்சிறப்பு பிறன் மனைவியை விரும்பாதது’’என்று அவனது ஆசி….. கூறிய வார்த்தைகள் அவனின் மனதில் எதிரொலித்தன.

‘‘மாதவா, இப்பொழுது நமது ஊரில் நல்ல மழை பெய்கிறது. மழையில்லாமையால் பயிர் செய்ய முடியாது . துன்பப்பட்ட விவசாயிகள் இப்பொழுது மழைபெய்வதால் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். நீ இனி ஊருக்கு வரலாம் தானே. நீயில்லாதது எனக்குக் கஷ்டமாக உள்ளது. ஊருக்கு

வா. வேண்டிய உதவிகள் அனைத்தையும் நான் செய்து தருகிறேன்'' என்றான் தேவராசா.

“நண்பா, நான் எனது ஊரைவிட இங்கு வசதியாக வாழ்கிறேன். அருணாசலம் ஐயா மிகவும் நல்லவர். அவர் என்னை வேலைக்காரனாக நினைக்காது தரதர சகோதரனாக நினைக்கிறார். ஊரில் எம்மிடம் வயல் இல்லை. குத்தகைக்குச் செய்தோம். இங்கே எமக்கென்று வயலை அருணாசலம் ஐயா தந்திருக்கிறார். அத்துடன் வீட்டு வேலை செய்வதால் மாதா மாதம் பெருந்தொகைப் பணம் தருகிறார். ஊரில் சில காலங்களில் மழை பெய்யும் சில காலங்களில் மழை பெய்யாது. இங்கு அப்படியில்ல. மழை பெய்யாவிட்டாலும் குளத்திலிருந்து நீர் பாய்ச்சலாம். விவசாயிக்கு மழை பெய்வது இனிது. தொழிலாளிக்கு தினமும் தொழில் கிடைப்பது இனிது. இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று இனிது. நாட்டை ஆளும் மன்னர்களுக்குத் தம் அரண்மனைவாசலில் பாவனைகள் நின்று பிளிறுவது இனிதென்று புலவர்கள் பாடியுள்ளனர். எனக்கு அருணாசலம் ஐயாவின் துணை தான் இனிது'' என்றான் மாதவன்.

**16. கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே**
**மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே**
**எள்துணை யானும் இரவாது தானீதல்**
**எத்துணையும் ஆற்ற இனிது.**

கற்றவர்களுக்குத் தான் கற்றதை எடுத்துச் சொல்ல் இனிது. அறிவுடையாருடன் சேர்ந்திருத்தல் அதனிலும் இனிது. எள்ளளவு கூடப் பிறரிடம் யாசிக்காதிருந்து பிறருக்குக் கொடுத்தல் எல்லாவற்றிலும் இனிது.

அன்று காலை ஊரில் உள்ள பெரியவர்களும் அறிஞர்களும் அருணாசலத்தின் வீட்டுக்கு வந்திருந்தனர்.

அவர்களை வரவேற்று உபசரித்து உணவளித்த பின் அவர்களை அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்திவிட்டு அவர்கள் ஏவும் ஏவல்களைச் செய்வதற்காகக் காத்திருந்தான் மாதவன். அவ்வூரில் வாழும் அறிஞர்கள் திருவள்ளுவருக்கு விழா எடுப்பது பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் பேசுவதைக் கேட்பது மாதவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. திருக்குறளில் உள்ள தத்துவங்களைப் பற்றி ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருந்தனர். ‘‘கற்றவர் சபையில் இருப்பதும் , அவர்கள் பேசுவதைக் கேட்பதும், அதற்குக் கற்றவர்கள் பதில் கூறுவதும் எவ்வளவு இனிமை’’ என்று நினைத்தான் மாதவன். ‘‘இந்த கையை அறிவுள்ளவர்களை விட்டுவிட்டு ஊருக்குச் சென்று வாழ்வது துன்பம். கற்றவர்களுடன் சேர்ந்திருப்பது தான் இன்பம் என்று நினைக்க மனம் இனித்தது.

‘‘இந்த விழாவுக்கான செலவு அனைத்தையும் நான் ஏற்கிறேன்’’. என்றார் அருணாசலத்திடம் உதவி பெற்றுக் கல்வி கற்று உயர்ந்த பதவியில் இருக்கும் ஒருவன் அருணாசலத்திற்குப் பட்டு வேட்டியும் சால்வையும் கொண்டு வந்து கொடுத்தான். அதை வாங்க மறுத்த அருணாசலம் சொன்னார், ‘‘மகனே, நான் வசதியானவன், பிறரிடம் எதையும் எதிர்பாரது கொடுப்பவன். எனக்கு, நீ ஏதாவது தரவிரும்பினால் அதை என்னை நினைத்துக் கொண்டு ஏழைகளுக்குக் கொடு. அதனால் உனக்கும் புண்ணியம் கிடைக்கும், எனக்கு மகிழ்ச்சி கிடைக்கும். எப்பொழுதும் இல்லாதவனுக்குத்தான் உதவவேண்டும். நீ கொண்டு வந்த பொருட்களை மாதவனுக்குக் கொடுத்து விட்டுச்செல். அவன் அதை அணிந்தால் நான் மிகவும் மகிழ்வேன்’’ என்றார் அருணாசலம். மாதவன் திகைத்துப் போனான்.

**17. நட்டார்க்கு நல்ல செயலினிது எத்துணையும்**
**ஒட்டாரை ஒட்டிக் கொளல் அதனின் முன் இனிதே**
**பற்பல தானியத்த(து) ஆகிப் பலருடையும்**
**மெய்த்துணையும் சேரல் இனிது.**

நண்பர்களுக்கு உதவுதல் இனிது. தனது பகைவரோடு சேராதவர்களை நண்பராக்கிக் கொள்வது இனிது. பல்வேறு வகையான உணவுப் பொருட்கள் உள்ள அரனில் மெய்க்காப்பு வீரரோடு சேர்ந்திருத்தல் இனிது.

அன்று காலை பரதேசியைப் போல உருவ அமைப்புள்ள ஒருவர் வந்து, அருணாசலம் இருக்கிறாரா?'' என்று மாதவனிடம் கேட்டார்.

''இருக்கிறார். வேப்பமரநிழலில் உள்ள இருக்கையில் அமர்ந்திருங்கள் வந்து விடுவார்'' என்றான் மாதவன்.

''வா செல்லத்துரை. இப்போது தான் எனது ஞாபகம் வந்ததா? என்று கேட்டபடி வந்தவனைக் கட்டித் தழுவினார் அருணாசலம், ''செல்லா, உன்னை நினைக்காத நாளே இல்லை. பேசாமல் வந்து என்னுடன் இரு.'' என்றார்.

''இல்லை அருணா, சிவனடியார்க்குத் தொண்டு செய்வதைத் தான் நான் விரும்புகிறேன். நான் ஆண்டியைப்போல் அலைவதால் எனது வீட்டார் துன்பப்படுகின்றனர். அவர்களுக்கு உதவிசெய்'' என்றார் செல்லத்துரை.

''உதவிகள் செய்வது இனிமையானது. நண்பர்களுக்கு உதவி செய்வது அதனிலும் இனிமையானது. நண்பர்களுக்கு உதவி செய்வது அதினிலும் இனிமையானது.

நான் வேண்டிய உதவிகளையெல்லாம் செய்கிறேன். நீ கவலைப்படாது தொண்டுகளைச் செய்'' என்றார் அருணாசலம்.

''அருணா, நன்மைசெய்பவர்களையும் பழித்துரைக்கும் தீயவர்கள் இருக்கிறார்கள். நாகராசா எம்மோடு படிக்கும் போதே உன்னில் பொறமை கொண்டான். உனது கல்வியையும் புகழையும் விரும்பாதவன். உன்னைத் தனது பரம விரோதியாய் நினைத்தவன். இன்னும் அப்படித்தான் வாழ்கிறான். அவனது சகோதரன் சிவராசா மிகவும் நல்லவன். உன்னைப் பற்றி எப்போதும் உயர்வாகப் பேசித் தனது சகோதரனின் வாயை அடைப்பவன். பாவம் அவன் கஷ்டப்படுகிறான். அவன் கஷ்ட்டப்படுகிறான். அவன் உன்னைப் புகழ்வதால் நாகராசா அவனுக்குப் பல தொல்லைகள் கொடுக்கிறான். சிறிதளவும் தனது பகைவரோடு சேராதவரை நட்பாக்கிக் கொள்வது இனியது. அதனால் அவனுக்கு உதவி செய்து அவனை நட்பாக்கு. அவனது பிள்ளைகளுக்கு உதவி செய்'' என்றார் செல்லத்துரை.

''செல்லா, பல்வேறு உணவுப்பொருட்கள் உடைய தாய் எதிரிகள் தோற்பதற்குக் காரணமாக உள்ள அரணின் மெய்ப்பாதுகாப்பு வீரரோடு கூடியிருத்தல் இனிமையானது என்று பெரியவர்கள் கூறுவார்கள். நடராசாவும் பல்வேறு விதமான நற்குணங்களையுடையவன். அத்துடன் மன உறுதி படைத்தவன். எதற்கும் அஞ்சாதவன். அவனுக்கு உதவுவது இனிமையானது. அவனை அழைத்து வா. தேவையானவையெல்லாம் கொடுப்போம்'' என்றார் அருணாசலம்.

**18. மன்றின் முதுமக்கள் வாழும் பதி இனிதே**
**தந்திரத்தின் வாழும் தவசிகள் மாண்பினிதே**
**எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்**
**கண்டெழுதல் காலை இனிது.**

கல்வியறிவுள்ள சான்றோர் மன்றில் இருக்கும் ஊர் இனிது. நூல்கள் கூறியபடி வாழ்கின்ற தவசிகளின் மாட்சிமை இனிது. குற்றமில்லாத சிறப்புக்கள் மிகுந்த பெற்றோரைக் காலையில் வழிபடுதல் இனிது.

அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு கடவுளை வணங்கிய அருணாசலம் தரதர சகோதரியின் வீட்டுக்குப் புறப்பட்டார். அவர் மோட்டார் வண்டியில் ஏறியதும் மாதவன் மோட்டார்வண்டியைச் செலுத்திச்சென்று அருணாசலத்தின் சகோதரியின் வீட்டுப் படலையில் நிறுத்தினான். அருணாசலம் தான் கொண்டு வந்த உணவுப் பொட்டலத்தைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு தாயையும் தந்தையையும் வணங்கினார்.

தாயார் அவரை அனைத்து முத்தமிட்டுவிட்டு பசுப்பால் கொடுத்தார். பின்பு ஒரு பொதியைக் கொடுத்து , ‘‘இதை ஆருரனிடம் கொடு’’ என்றார்.

அதைப் பார்த்த மாதவனுக்கு மெய் சிலிர்த்தது, ‘‘குற்றமில்லாத, பல சிறப்புக்களைக் கொண்ட பெற்றோரைக் காலையில் தொழுதால் எல்லாப்பேறுகளும் கிடைக்கும்’’ என்று அருணாசலம் சொல்வார். அதை நினைக்க மாதவனுக்குப் பொறாமையாக இருந்தது. ‘‘எனது தந்தை தீயசெயல்கள் எல்லாம் செய்பவர். அவரைத்தொழுதால் தரித்திரம் தான் வரும்’’ என்று நினைத்தான்.

பெற்றோரை வணங்கிவிட்டு மோட்டார் வண்டியில் ஏறி அமர்ந்து அருணாசலம் சொன்னார், ‘‘மாதவா, இணக்கமன்றிற்கு விடு, தவநேசன் முரடன். சின்னத்துரை அப்பாவி, அதனால் சின்னத்துரை எதுவும் பேசாது இருக்கிறான். காணியின் மூல உறுதியினைப் பார்த்துப் பிரச்சினையைத் தீர்த்தல் வேண்டும். இழுபட விட்டால் தவநேசன் சின்னத்துரையைத் தாக்கி விடுவான்’’

‘‘நேற்று நான் சின்னத்துரையைக் கண்டனான். நீ அமைதியாக இருப்பது நல்லதல்ல என்றேன். அதற்குச் சின்னத்துரை சொன்னான், ‘‘ ஊர்மன்றில் அறிவுடைய சான்றோர் பலர் அங்கம் வகிக்கின்றனர். அருணாசலம் ஐயா எனது பிரச்சினையை நல்ல முறையில் தீர்த்து வைப்பார். அவர் இருக்கும் மன்றில் அச்சப்படும்படியாக எதுவும் நடைபெறாது. அதனால் தான் நான் அமைதியுடனும், நம்பிக்கையுடனும் இருக்கிறேன்’’ என்றான். எமது ஊர்மன்றில் இருப்பவர்கள் இலஞ்சம் பெற்றுக் கொண்டு தீர்ப்புக்களை மாறி வழங்கிவிடுவர். ஆனால் இங்கு அப்படியல்ல. ஊர் மன்றில் அறிவுடைய சான்றோர் இருப்பது ஊர்மக்களுக்கு மிகவும் இனிமையானது. அத்துடன் அறநூல்கள் கூறுகின்றபடி வாழ்கின்ற சான்றோர் பலர் இங்கு வாழ்கிறார்கள். இவர்கள் பற்றற்ற துறவிகளைப் போல வாழ்ந்து மக்களின் துன்பங்களைப் போக்குகிறார்கள். இவர்களது மாட்சிமை மிக மிக இனிது’’ என்றான் மாதவன்.

அருணாசலம் மோட்டார்வண்டியால் இறங்கியதும் தவநேசன் ஓடிவந்து அவரது பாதங்களைப் பற்றிப் பிடித்தவாறு சொன்னான், ‘‘ஐயா, தருமவான், உறுதியைப் பார்த்துச்

சொல்லுங்கள் நீங்கள் சொல்வதை நான் மறுப்பின்றி ஏற்பேன்'' அதைக்கேட்டு மாதவன் திகைத்துப்போனான்.

**19. நட்டார்ப் புறங்கூறின் வாழ்தல் நனிஇனிதே**
**பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன் இனிதே**
**முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது**
**தக்குழி ஈதல் இனிது.**

தனது நண்பரைக் காணாதவிடத்து இகழ்ந்து கதையாமை இனிது. சத்தியத்தை மீறாது வாழ்தல் இனிது. குறைவில்லாத பெருஞ்செல்வத்தைத் தேடி அதைத் தக்கார்க்கு கொடுத்துதவுதல் இனிது.

அருணாசலத்தின் உயிர் நண்பன் செல்லத்துரை. செல்லத்துரை குடும்பத்தவர்களைப் பிரித்து சிவனடியாராகிச் சிவனுக்குத் தொண்டுசெய்து வருபவர். இதனால் குடும்பத்தவர்களுடன் அடிக்கடி பெரும் பிரச்சினைப் படுபவர். ஊரில் உள்ள சிலருக்கும் அவரின் நடத்தை பிடிக்காது. ஆனால் அருணாசலம் கண்டு கொள்வதில்லை. அவரிடம் வந்து குடும்பத்தவர்கள் பல்வேறு குறைகளைக் கூறுவார்கள். அவர் அவற்றைக் கேட்பாரே தவிர அது பற்றிக் கருத்துக் கூறமாட்டார். அதனால் சொல்பவர்கள் பின்பு சொல்லாமல் விட்டுவிடுவர். செல்லத்துரையின் மனைவி காமாட்சி வசதியான குடும்பத்தவள். செல்லத்துரை பெரும் வர்த்தகர். அதனால் தான் காமாட்சியின் தந்தை தரதர மகளைச் செல்லத்துரைக்குத் திருமணம் செய்து வைத்தார். திருமணம் முடித்துப் பலகாலம் குடும்பத்துடன் மிகவும் ஒற்றுமையாக இருந்த செல்லத்துரை திடீரென்று சாமியராகி விட்டார். சாமியாரானதும் அவரது நடத்தையில் பெரும் மாற்றங்கள் உண்டாயின. அவர் முதலில் வீட்டைத்துறந்தார். பின்கண்ட கண்ட வீடுகளில் பிச்சைபெற்று

உண்டார். இது வசதியாக வாழும் செல்லத்துரையின் மனைவி பிள்ளைகனுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் அதைப்பெரும் அவமானமாகக் கருதினர்.

அன்று செல்லத்துரை ஒருகீழ் சாதிக்காரனின் வீட்டில் பிச்சை ஏற்று உண்டு விட்டார். அதை அறிந்த காமாட்சி ஆத்திரத்துடன் அருணாசலத்தின் வீட்டிற்கு வந்து அழுது விட்டுச் சென்றாள். அவள்பெருங்குரலெடுத்து அழுத போதும் அருணாசலம் எதுவும் சொல்லவில்லை. அது அவளுக்குப் பெருங்கோவத்தை உண்டாக்கியது. அதனால் அவள் வாயில் வந்தபடி அருணாசலத்தை ஏசினாள். அதற்கும் அருணாசலம் பதில் கூறவில்லை. அது அப்போது அங்கிருந்தவர்களுக்குத் துயரத்தைக் கொடுத்தது. அதனால் சொன்னார், “தனது நண்பரைப் பற்றி அவர் இல்லாத இடத்தில் நிறைவாகக் கூடக் கதைக்கக் கூடாது. ஒவ்வொருவருக்கும் ஒரு கொள்கை உண்டு. தீயவற்றைச் செய்தால் நேரில் புத்திமதி கூறலாம். சிவனடியாரைப் பற்றி நான் என்ன கூறமுடியும்?” என்றார். காமாட்சி அழுதழுது சென்றுவிட்டாள், “சத்தியத்திற்குச் சோதனைகள் பலவாகும். அதைக்கண்டு அஞ்சக்கூடாது. அஞ்சினால் தீமைகள் செய்ய வேண்டிய நிலை உருவாகும். குறைவில்லாத பெரும் பொருளை விரைவாகத் தேடவேண்டும். அதை உரியவர்களுக்குக் கொடுத்துதவ வேண்டும். அது தான் சத்தியத்தைப் பேணும் முறை” என்றார் அருணாசலம் கூடியிருந்தவர்கள் எதுவும் பேசவில்லை.

**20. சலவரைச் சாரா விடுதல் இனிதே**
**புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே**
**மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்**
**தகுதியால் வாழ்தல் இனிது.**

வஞ்சகர்களுடன் சேராதிருத்தல் இனிது. அறிவுடையவரின் அறிவுரைகளை மீறாது வாழ்தல் இனிது. மண்ணுலகில் வாழும் உயிர்கள் அனைத்தையும் மதித்து வாழ்தல் இனிது.

காமாட்சி சென்றபின் அவளது மகன் சிவகுமாரன் அருணாசலத்தின் வீட்டுக்கு வந்து சொன்னான், “ காலையில் அம்மா வந்து தங்களுடன் கோபத்துடன் உரையாடியதாக அறிந்தேன். அதற்காக நான் தங்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். அம்மா பெரும் கோடீஸ்வரவ ர்த்தகரின் மகள். அதனால் அவாவுக்கு அப்பாவின் செயல்களால் தமது குடும்பத்திற்கு பெரும் அவமானமெனக் கருதுகிறார். அப்பாவின் மனதில் இப்போ சிவனைத் தவிர யாரும் இல்லை. அதனால் அவர் சிவனிட்ட கட்டளையெனச் சில செயல்களைச் செய்கிறார். அவரின் நிலையில் அவர் நினைப்பது சரி. ஆனால் “பரிபூரண நிலையைப் பற்றித் தெரியாத அம்மாவின் நிலை தான் எமக்குக் கவலையாகின்றது. அப்பா சிவனடியார்களுடன் சேர்ந்திருக்கிறார். அது இனிமையானது என்று அவர் நினைக்கிறார். சிவனின் நாமத்தைக் கூறிக்கொண்டு தீய செயல்களைச் செய்தல்தான் தீது” என்றான் சிவகுமார்.

அருணாசலம் சிரித்தாரே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை. அவர் கற்கும்போது அவருடைய ஆசிரியர் கூறியபடிதான் அவர் வாழ்ந்து வருகிறார், “மற்றவர்களைப் பற்றி எண்ணாதே. உன்னைப்பற்றி எண்ணி உனது குறைகளை நீக்கு மற்றவர்கள் செய்வதில் குறைகள் இருக்கலாம். அதை விடக்கூடிய குறைகள் உனது செயல்களில் இருக்கும். அதனால் உன்னிடமுள்ள குறைகளை நீக்கு. மற்றவர்கள் உன்னைப் பார்த்துத் திருந்தட்டும்” என்று ஆசிரியர் கூறியதை

நினைத்து வாழ்ந்து வருகிறார். அதனால் சிவகுமார் கூறியவற்றிற்கும் சிரித்தாரே தவிரப் பதில் கூறவில்லை. சிவகுமார் சென்றபின் மாதவன் கேட்டான், "ஐயா, யாராவது வந்து கோபமாகப் பேசினாலும் சிரிக்கிறீர்கள். சாந்தமாகப் பேசினாலும் சிரிக்கிறீர்கள். இது ஏன்?"

"மாதவா, இவ்வுலகில் வாழ்கின்ற எல்லா உயிர்களும் தம் உரிமையுடன் வாழுதலே இனியதாகும். ஒருவர் கோபப்படுவார். அது அவரது உரிமை. இன்னொருவர் அன்புடையவராக இருப்பார். அது அவரின் உரிமை. அதை மதித்தல் வேண்டும். நல்லவற்றைச் செய்பவனுக்கு நல்லவற்றைச் செய் என்று கூறத் தேவையில்லை. தீயவற்றைச் செய்பவனுக்கு அதைச் செய்யாதே என்று கூறினாலும் அதையே செய்வான். அதனால் தான் நான் எதுவும் சொல்வதில்லை" என்றார் அருணாசலம்.

**21. பிறன்கைப் பொருள்வௌவான் வாழ்தல் இனிதே**
**அறம்புரிந் தல்லவை நீக்கல் இனிதே**
**மறந்தேயும் மாணா மயரிகள் சேராத்**
**திறந்தெரிந்து வாழ்தல் இனிது.**

பிறருடைய கைப்பொதிகளை அபகரிக்காமல் வாழுதல் இனிது. அறப்படி வாழ்ந்து தீமைகள் செய்யாதிருத்தல் இனிது. மறந்துங்கூடத் தீயவர்களுடன் சேராதிருத்தல் இனிது.

அன்று காலை அருளம்பலம் காலமாகியதால் அவரது மகன் செந்தூரன் அருணாசலத்தின் வீட்டுக்கு வந்திருந்தான். அருளம்பலம் பரம ஏழை. அவர் தரதர பிற்காலத்திற்கெனச் சிறுதொகைப்பணம் சேமித்து வைத்திருந்தார். அப்பணத்தைத் தனக்குத் தரும்படி செந்தூரன் அவரைக் கரைச்சற்படுத்திக்கொண்டிருந்தான். செந்தூரன் நல்லவனல்ல.

அதனால் தான் சேமித்து வைத்திருந்த பத்தாயிரம் ரூபாவை அருளம்பலம் அருணாசலத்திடம் கொடுத்துவிட்டு, ஐயா, இந்த ஊரில் நம்பிக்கையானவர் நீங்கள் மட்டும் தான். அதனால் தான் எனது இறுதிக் காலத்திற்காகச் சேமித்து வைத்த பணத்தை உங்களிடம் தருகிறேன். இதை நான் இறந்த பின்பு செந்தூரனிடம் கொடுங்கள்'' என்று சொன்னார். அருணாசலத்தின் தூரத்து உறவினர் அவர். அதனால் அவர் அப்பணத்தை வாங்கினார். பின்பு மாதா மாதம் இரண்டாயிரம் ரூபா அருணாசலத்திற்குக் கொடுத்தார். கொடுக்கும் போது அவர் சொல்வார், ''அருளம்பலம், உனது பணத்தை எனது வியாபாரத்தில் முதலீடு செய்யாதிருக்கிறேன். அதனால் வரும் வருமானத்தை உனக்குத் தருகிறேன்''

இவ்வாறு பத்து வருடங்களாக அவர் அருளம்பலத்திற்குக் கொடுத்து வருகிறார். அருளம்பலம் கூறியபடி செந்தூரனுக்குப் பணம் கொடுப்பதற்காக பணம் கொண்டுவந்தான். அருணாசலம் அதை வாங்காது செந்தூரன் சொன்னான், ''ஐயா, நீங்கள் பிறருடைய கைப் பொருளை அபகரிக்காது வாழும் உத்தமர். அதனால் அப்பா தந்த பணம் உங்களிடமே இருக்கட்டும். நான் வைத்திருக்கும் பணத்தில் எனது தந்தையின் இறுதிக்கிரியைகளைச் செய்கிறேன். நீங்கள் அப்பாவுக்குக் கொடுக்கும் பணத்தை மாதாமாதம் எனக்குத் தாருங்கள்''.

அருணாசலம் ''சரி'' என்றார். செந்தூரன் மிக்க மகிழ்வுடன் சென்றான், ''பத்தாயிரம் ரூபா கொடுத்துவிட்டுப் பத்து இலட்சம் ரூபா வாங்கிவிட்டார். பிறருடைய கைப்பொருளை அபகரிக்க நினைக்காத அருணாசலம் இப்படிப் பலருக்குக் கொடுப்பதை இனிமையானதாகக் கருதுகிறார்''.

என்றான் மாதவன், “அருணாசலம் ஐயா, அறம் செய்வாரே தவிரப் பாவங்களைச் செய்ய மாட்டார் அவர் எவ்வளவு தான் கஷ்ரங்கள் கரைச்சல்கள் துன்பங்கள் வந்தாலும் கூடத் தீய செயல்களைச் செய்யமாட்டார், தீயவர்களோடு சேரமாட்டார்” என்று அங்கு வந்த பெரியவர் ஒருவர் கூறியதைக் கேட்ட மாதவன், அவர் சொல்வது உண்மை என்று நினைத்தான்.

**22. வருவாய் அறிந்து வழங்கல் இனிதே**
**ஒருவர்பங் காகாத ஊக்கம் இனிதே**
**பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்**
**திரிபின்றி வாழ்தல் இனிது.**

தனது வருவாயை அறிந்த பின் கொடுப்பதே இனிது. ஒருவருக்குச் சார்பாக நடவாமை இனிது. பெரும்பொருள் வந்தாலும் தம் இயல்பில் மாறுபாடு அடையாதவராக வாழ்தல் இனிது.

கதிரவனார் அவ்வூரின் பெரியவர்,சான்றோர், கல்வி அறிவுமிக்கவர். அவர் அன்று காலை அருணாசலத்தின் வீட்டிற்கு வந்தார். அருணாசலம் கணக்குப் பாராது கேட்பவர்களுக்கெல்லாம் கொடுப்பது அவருக்கு வேதனையை அளித்தது. மனிதர்களிடம் ஒருபோதும் பிரதிபலனை எதிர்பார்க்கமுடியாது. மரம் பழுத்தால் பறவைகள் மரத்தைத்தேடி வருவதுபோலக் கொடுப்பவர்களிடம் மக்கள் வந்து பல்வேறு காரணங்களைக் கூறிப் பொருட்களைப் பெறுவார்கள். கொடுப்பவர் ஏழையானால் கைவிட்டு விடுவார்கள். என்றுணர்ந்த கதிரவனார் அருணாசலத்திற்கு நிஜமான உலகை எடுத்துக் கூறவேண்டுமென்று நினைத்து அருணாசலத்தின் வீட்டுக்கு வந்தார். அருணாசலம் அவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று ஆசனத்தில் இருத்தினார்.

“மகனே, நீ கர்னனைப்போல எதையும் ஆராயாது இரப்பவர்களுக்குக் கொடுத்து உதவுகிறாய். கொடுத்துக்கொடுத்து ஏழையாகிவிட்டால் உன்னையும் உன் குடும்பத்தவர்களையும் கவனிப்பது யார்? இரப்பவர்கள் இரந்து கொண்டிருப்பார்களே தவிரக் கொடுத்துதவமாட்டார்கள் என்பதைப் புரிந்து உனது பிற்கால வாழ்விற்கெனச் சேமித்து வை” என்றார்.

“ஐயா, நீங்கள் கூறியவை யாவும் எனக்குத் தெரியும். நான் எனக்குதவ வேண்டும் என்பதற்காகக் கொடுப்பதில்லை. எனக்கு வருகின்ற பொருளின் அளவுக்கேற்ப அதன் ஒரு பகுதியையே கொடுத்துதவி வருகிறேன். தனக்கு மிஞ்சியது தான் தானம் என்பது எனது கொள்கை. அது தான் இனிமையான கொடை. அத்துடன் எனக்கு இன்னார், இனியவர் என்று யாரும் இல்லை. இரப்பவர் தகுதியானவராக இருந்தால் கொடுப்பேன். எனது தகுதிக்கு மேலாகவும் கொடுக்கமாட்டேன். பெரும்பயன் தான் வந்தாலும் எனது இயல்பு மாறாது. இந்திரப் பதவி கிடைத்தாலும் எனது மனநிலை மாறாது. இந்திரப் பதவி கிடைத்தாலும் எனது மனநிலை மாறாது. நான் பெரியவன் அல்ல, அறிவாளி அல்ல, என்றார் அருணாசலம்.

அதைக்கேட்ட கதிரவானார் திகைத்துப்போனார்.

**23. காவோ(டு) அறக்குளம் தொட்டால் மிக இனிதே**
**ஆவோடு பொன்னீதல் அந்தணர்க்கு முன் இனிதே**
**பாவமும் அஞ்சாராய்ப் பற்றுந் தொழில்மொழிச்**
**சூதரைச் சோர்தல் இனிது.**

சோலை வளர்ப்பதும் தருமத்திற்காகக் குளம் வெட்டுவதும் இனிது. பிராமணர்களுக்குப் பசுவுடன்

பொன்கொடுத்தல் இனிது. பாவத்திற்கு அஞ்சாது சூதாடு பலர்களின் உறவை நீங்குதல் இனிது.

அன்று அருணாசலத்தின் பேரானாரின் திவசம். தரதர இனத்தவர்கள், நண்பர்கள், அயலவர்கள் எல்லோருக்கும் அன்று மதிய உணவு கொடுப்பதாக அறிவித்திருந்தார். அதனால் அவரது வீட்டில் ஏராளமான மக்கள் குழுமி இருந்தனர். திவசத்திற்கான கிரியைகளைச் செய்துமுடித்த பின் கிரியை செய்த அந்தணர் சொன்னார், “அருணாசலம், சிவன்கோயிற்குளத்தைப் புனரமைத்தல் வேண்டும். அத்துடன் மக்கள் அக்குளத்தைத் தமது அனைத்துத் தேவைகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். ஆறு தூரத்தில் பாய்வதால் அங்கு செல்ல விரும்புகிறார்கள் இல்லை. அதனால் மக்களின் பாவனைக்கு ஒரு குளம் வெட்டுதல் வேண்டும்”

“நான் நெடுநாளாக நினைத்திருந்தேன். நீங்கள் ஞாபகமூட்டிவிட்டீர்கள். சிவன் கோயின் தெற்குப் பக்கமாக இருக்கும் வெற்றுக்காணியுள்க் குளத்தை வெட்டுவோம். குளமிருந்தால் தான் ...............சோலையாகும்? என்ற அருணாசலம் குருக்களுக்குத் தெட்சனையாக ஒரு பசுவும் பொன்னும் கொடுத்தார்.

“பிரமாணர்களுக்குப் பசுவும் பொன்னும் கொடுப்பது இனிது. சோலைவளர்க்க் குளம் வெட்டிக் கொடுப்பது இனிதென்று பெரியவர்கள் சொல்வார்கள். பெரியோர் சொல்வதை மதித்து வாழும் உனக்கு ஒரு போதும் எந்தக் குறையும் வராது” என்றார்.

செல்லத்துரையின் மகன் சிவகுமாரன் சபையில் இருந்து சாப்பிட்டு விட்டு வந்து கையைக் கழுவிய பின் அவனை

அழைத்துக் கொண்டு தனிமையான ஓர் இடத்திற்கு வந்த அருணாசலம் சொன்னார், ‘‘சிவா, உனது தந்தையும் பேரனாரும் பெரும் சிரமப்பட்டுத் தேடிய சொத்தை நீ சூதாடி அழிக்கிறாய். சூது கொடியது. அது எல்லாத் தீமைகளையும் செய்யத்தூண்டும். பழிபாவங்களைப் பார்க்கவிடாது. தருமம் செய்யவிடாது. அப்படியான தீய செயல்களை நீயும் உனது சகோதரர்களும் செய்வதனால் தானோ தெரியவில்லை உனது தந்தை வீட்டைவிட்டு வெளியேறினார். சூதாடுபவர்களுடன் சேரக் கூடாது. சேர்ந்தால் அப்பாவம் எம்மையும் தொடரும். ஆகையால் நீ இங்கு வராதே’’ என்றார் அருணாசலம். அதற்குச் சிவகுமாரன் ஏதோ சொல்ல முற்பட்டான். அதைக் கவனித்த அருணாசலம் விரைவாக அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

**24. வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பினிதே**
**ஒல்லும் துணையுமொன்(று) உய்ப்பான் பொறை இனிதே**
**இல்லது காமுற்(று) இரங்கி இடர்படார்**
**செய்வது செய்தல் இனிது.**

முத்தியடைதலை விரும்பி சினங் கொள்ளாதவனின் தவம் இனிது. எடுத்துக் கொண்ட செயலை செய்து முடிப்பவனின் ஆற்றல் இனிது. தன்னிடம் பொருள் இல்லாதபோதும் செய்யவேண்டிய கருமங்களைச் செய்து முடிப்பது இனிது.

அன்றுகாலை செல்லத்துரை அருணாசலத்தின் வீட்டுக்கு வந்திருந்தார். அவனைக்கண்ட அருணாசலம் திகைத்துப் போனார். முன்பு பட்டுவேட்டியும் பட்டுச் சட்டையும் , பட்டுத்தலைப்பாகையும் அணிந்து கம்பீரமாகக் காட்சியளிக்கும் செல்லத்துரை ஒரு கிழிந்து தைக்கப்பட்ட காவி உடை அணிந்திருந்தார். அவர் முற்கோபி, தான் நினைத்ததைச் செய்பவர், திமிர் மிகுந்தவர். தன் முன்னால் யாராவது தோளில்

சால்வை அணிந்திருந்தாலே கோபப்படுவார், பழிவாங்குவார். ஆனால் இப்போது சாந்த சொரூபியாக இருந்தார். அவரது முகத்தில் இருந்த திமிர் ஆணவம், அகங்காரம் யாவும் அகன்று அதில் தெய்வீக ஒளி வீசியது. தொட்டுக் கும்பிட வேண்டும் போல இருந்தது.

“அருணா, வாழ்க்கை போலியானது. உலகம் மாயத் தோற்றத்தைக் கொண்டது. உறவுகள் இலாபத்தை நோக்காகக் கொண்டது என்று புரிந்து அடங்கி விட்டேன். வாழ்க்கை போதும். இனி இறைவனை அடைதல் வேண்டும். அதற்காக நான் இமய மலைக்குச் செல்லவிரும்புகிறேன். அதை எனது நண்பனான உன்னிடம் சொல்லிச் செல்ல வந்தேன். மேன்மையடைய விரும்புவோன் முதலில் சினத்தை விடுதல் வேண்டும். சினம் ஒழிந்தால் இனிமை இதயத்தை நிரப்பும். பின் படிப்படியாக எமது தீய குணங்கள் மாறும். வாழ்க்கையில் நல்லவற்றையும் தீயவற்றையும் நான் நினைத்தபடி செய்து சாதித்து விட்டேன். சாதனை செய்வது, எடுத்த கருமத்தை முடிப்பது என்பன இனிமையான விடயங்கள் இல்லற வாழ்க்கையில் நினைத்ததைச் செய்வது இனிமை. துறவறவாழ்க்கையில் இறைவனை அடைவது இனிமை. ஆரம்பத்தில் என்னிடம் பெரிதாகப் பொருள் இருக்கவில்லை. அதற்காக நான் வருந்தவில்லை, பொறாமைப்படவில்லை. சோலம்பியிராது முயற்சித்தேன். அதனால் பெரும் பணக்காரனானேன். எனது முயற்சி பலிக்க பலிக்கப் மகிழ்ச்சி உண்டானது. பொருள் சேர்ந்தது. அதனால் பெரும் இடத்தில் திருமணம் செய்தேன். தேடவேண்டியவையெல்லாம் தேடிவிட்டேன். இனி இறைவனைத் தேடிக்கண்டு பிடித்து அவனோடு கூட இருக்க வேண்டுமென எண்ணுகிறேன். அந்த எண்ணம் மகிழ்ச்சியைத் தருகிறது” என்றார் செல்லத்துரை.

அருணாசலம் எதுவும் சொல்லாது அவருடன் கூட இருந்து உணவருந்தினார்.

**25. ஐவாய் வேட்கை அவாஅடக்கல் முன் இனிதே**
**கைவாய்ப் பொருள் பெறினும் கல்லார் கண் தீர்வினிதே**
**நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்**
**புல்லா விடுதல் இனிது.**

ஐம்பொறிகளால் எழுகின்ற ஆசைகளையும் அவாவவையும் அடக்குதல் இனிது. பெரும் பொருள் கிடைப்பதாக இருந்தாலும் கல்லாதவரின் உறவை நீக்குதல் இனிது. தீயவர'களுடன் சேராதிருத்தல் இனிது.

“அருணா, இனிநான் உன்னைச் சந்திப்பேனோ தெரியாது. ஆடி அடங்கிய பின் தான் வாழ்க்கையின் தத்துவங்கள் புரிகிறது. ஐம் பொறிகளால் பெரும் உணர்வுகளைத் தீர்க்க நான் எவ்வளவு பாடுபட்டேன். எனது தொழிலை மறந்து, குடும்பத்தை மறந்து உணர்வுத் தீயின் கொடுமையில் பல கொடுமைகளைச் செய்து விட்டேன். எனது தொழிலாளியின் மனைவி ஒருத்தி மிகுந்த அழகு. அவளின் அழகு என்னைக் கொன்றது. அவள் என்னைக் கொன்றது. அவள் என்னை ஏறெடுத்துப் பார்க்க மறந்தாள். பணத்தை அள்ளிக் கொட்டியும் அவர் மசியவில்லை. தனது கொள்கையில் உறுதியாக இருந்தாள். நான் அவளைப் பழிவாங்க நினைத்து அவளது கணவன் மீது திருட்டுப் பழியைச் சுமத்தி அவனைச் சிறைக்கு அனுப்பினேன். அப்போதும் அவள் மனம் மாறவில்லை. அவளது வீட்டைத் தீயிட செய்தேன். அதன் பின் அவளை நான் காணவில்லை. ஐந்து வருடங்களின் பின் அவள் இன்னோர் ஊர்ச் சிவன் கோயிலில் பிச்சை எடுத்து வாழ்ந்து கொண்டிருந்தாள். அதனால் உலகை வெறுத்தேன். எனது பணம் பொருளால்

கேவலம் ஒரு பெண்ணின் மனதை மாற்ற முடியவில்லை. அதனால் துறவியாகினேன். ஐம்பொறிகள் அடங்கிவிட்டன. இப்போது மனதில் சஞ்சலமில்லை. அதனால் சிறையிலிருந்து வந்த அவளின் கணவனுக்குப் பெரும்பொருள் கொடுத்து அவனை வர்த்தகராக்கினேன். இப்போது தான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. ஐம்பொறிகளின் உணர்வு அடங்குவது மிகமிக இனிது''

''பெரும்பொருள் கொடுத்தென்றாலும் கல்லாதவரின் நட்பை நீக்க வேண்டும், பெரும்பொருள் கிடைப்பதாக இருந்தாலும் கூடக் கல்லாதவரின் நட்பை நீக்க வேண்டும், பெரும்பொருள் கிடைப்பதாக இருந்தாலும் கூடக் கல்லாதவரின் நட்பை விரும்பக்கூடாது'' என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் கல்லாத தீயவர்களைத் தான் பெரும் பொருள் கொடுத்துத் துணையாக வைத்திருந்தவர்கள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடந்து பொருள்தேட நினைத்து என்னை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்தனர். அதனால் நான் பெருந்துன்பப்பட்டேன், நட்டப்பட்டேன், அவமானப்பட்டேன். அதனால் தான் ஐம்பொறிகளின் இயல்புக்கேற்ப ஆசைப்படும் தீயவர்களின் உறவைக் கைவிட்டேன். அதனால் தற்போதைய வாழ்வு இனிக்கிறது. நண்பா, நீ ஐம்பொறிகளுக்கு அப்பாற்பட்டவன். உன்னை யாராலும் மாற்ற முடியாது. உன்னைத் தீய சக்திகள் நெருங்கவும் மாட்டாது. நீ உத்தமன். அதனால் வாழும் போதே மகிழ்வுடன் வாழ்கிறாய். நீ துறவு கொள்ளத் தேவையில்லை உனது வாழ்வு துறவு வாழ்வு'' என்றார் செல்லத்துரை. அதைக் கேட்டுக் கொண்டிருந்த மாதவனுக்கு மெய் சிலிர்த்தது.

**26. நச்சித்தற் சென்றார் நசைகொல்லா மாண்பினிதே**
**உட்கில் வழிவாழா ஊக்கம் மிக இனிதே**
**எத்திறத் தானும் இயைவகரவாத**
**பற்றினின் பாங்கினியது இல்.**

ஒரு பொருளைப் பெறவிரும்பி வந்தவரின் மனத்தை நோகப்பண்ணாத மாட்சிமை இனிது. தன்னை மதிக்காதவரை மதிக்காமல் விடுதல் இனிது. தன்னிடம் உள்ளவற்றை ஒளிக்காது இன்முகத்துடன் கொடுக்கும் தன்மை அன்பிலும் பார்க்க இனிது.

அன்று காலை மணியூரில் வாழும் மாதவனின் நண்பன் சரவணன், மாதவனிடம் வந்து சொன்னான், ‘‘நண்பா, உன்னைத் தவிர எனக்கு உதவிசெய்யக் கூடியவர் யாரும் இல்லை. நான் இப்போது பெரும் நெருக்கடியில் இருக்கிறேன். எனது தங்கைக்கு வயது முப்பது. இன்னும் திருமணமாகவில்லை. என்பது உனக்குத் தெரியும். இப்போது நல்லதோர் இடத்தில் திருமணம் பேசுகிறார்கள். எனக்குக் கொஞ்சப் பணம் வேண்டும். உன்னைத் தான் நம்பி வந்துள்ளேன். நீ பணம் தராவிட்டால் இத்திருமணம் நடைபெறாது. இத்திருமணம் நடைபெறாவிட்டால் இனி அவளுக்குத் திருமணம் நடைபெறாது’’ அழுதான் சரவணன்.

‘‘ஒரு பொருளைப்பெற விரும்பாதவரின் நம்பிக்கையைத் தவிர்கக்கூடாது’’ என்று நினைத்த மாதவன், ‘‘நான் நீ கேட்ட பணத்தைத் தருகிறேன்’’ என்று கூறிவிட்டு அருணாசலத்திடம் வந்து தரதர நிலையை எடுத்துக் கூறினான்,

‘‘ஐயா, அவன் எனது உயிர் நண்பன். என்னை நம்பி வந்திருக்கிறான். அந்த நம்பிக்கையைக் கெடுக்கக்கூடாது. அவனின் சகோதரி எனக்கு மிகமிக வேண்டியவள். அவளை

நான் எனது சகோதரியாகவே நினைத்துப் பழகி வருகிறேன். நீங்கள் தரும்பணத்தை எனது சம்பளத்தில் மாதாமாதம் கழியுங்கள்'' என்றான்.

''தன்னை நம்பி வந்தவனை ஏமாற்றாது வாழுதல் இனிமையானது'' என்ற அருணாசலம். அவன் கேட்ட பணத்தைக் கொடுத்தார்.

''ஐயா, நீங்கள் கட்டாயம் தருவீர்கள் என்ற நம்பிக்கையால் நான் தருவேன் என்று உறுதியளித்து விட்டே வந்தேன். எமது ஊரில் இப்போது மழை பெய்வதால் விவசாயம் செழிப்படைந்துள்ளது. ஆனால் உங்களைப் பிரிந்து செல்ல எனக்கு விருப்பமில்லை. மதிப்பில்லாத இடத்தில்போல செய்தால் மனஎழுச்சி உண்டாகிப் பிரச்சினைகள் உருவாகும். அது இனிது என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நீங்கள் எம்மை உங்கள் உயராக நினைக்கிறீர்கள். அப்படியிருக்க எப்படிப் பிரிந்து செல்வது'' உணர்ச்சி வசப்பட்டான் மாதவன்.

''மாதவா, உள்ளதை ஒளிக்காது கொடுத்தல் இனிது'' என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். பெட்டியில் பிரியோசனமில்லாது உறங்கிக் கொண்டிருக்கும் பொருள் இன்னொருவருக்கு உதவுவது புண்ணியம். அதனால் தான் பெரியவர்கள் தம்முடமுள்ளவற்றை ஒளியாது பிறர்க்குக் கொடுத்துதவுவது மேலானது'' என்று கூறியுள்ளனர். என்னிடமுள்ள பொருள் ஒரு திருமணத்தை நடத்திவைக்கப்போகிறது என்பதை நினைக்க மனம் இனிக்கிறது'' என்றார் அருணாசலம்.

**27. தானங் கொடுப்பான் தகையாண்மை முன் இனிதே**
**மானம் படவரின் வாழாமை முன் இனிதே**
**ஊனங்கொண்டாடார் உறுதி உடையவை**
**கோள்முறையால் கோடல் இனிது.**

அபயமளிக்கும் பெருமைமிக்க வீரம் இனிது. மானம் இழந்தபின் உயிர் வாழாமை இனிது. குற்றம் இல்லாதவராக வாழ்ந்து நன்மையான செயல்களைச் செய்தல் இனிது.

சுந்தரலிங்கம் வசதியானவன். ஆனால் தீயவன். தீயவர்களுடன் சேர்ந்து செய்யக் கூடாதவற்றையெல்லாம் செய்பவன் தீயசெயல்களைச் செய்யப் பயந்தவர்கள் அவனிடம் பணம் கொடுத்தால் அவன் பணம் கொடுக்காதவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வான். இரத்தினசிங்கம் நல்லவன். வசதியானவன். அவளது மகளான கௌசல்யா நடேசப்பிள்ளையின் மகன் ஜனகன் காதலித்தான். ஜனகன் தீய செயல்களைச் செய்வதால் கௌசல்யா அவனை விரும்பவில்லை. அதனால் ஜனகன் சுந்தரலிங்கத்திற்குப் பணம் கொடுத்து கௌசல்யாவைப் பலாத்காரமாகக் கடத்தி வந்து தம்மிடம் தருமாறு சொல்லியிருந்தான். அதை அறிந்த இரத்தினசிங்கம் அதை அருணாசலத்திற்குச் சொன்னார். அருணாசலம் கௌசல்யாவை அயலூரில் உள்ள தரதர நண்பரின் வீட்டில் கொண்டு சென்று விட்டிருந்தார். அதை அறிந்த சுந்தரலிங்கம் ஆத்திரப்பட்டானே தவிர வேறெதையும் செய்யவில்லை. ஊரவர்களில் பலர் சுந்தரலிங்கத்திற்குப் பயந்து வாய் மூடி மௌனியாகி இருந்தனர். ஒருநாள் மாதவனை வழியில் கண்ட சுந்தரலிங்கம் சொன்னான், அருணாசலம் பெரிய மனிதர். ஊருக்கு உதவுபவர் நேர்மையானவர். ஒழுக்கமானவர். தனக்கு அவமானம் வந்தால் உயிரையும் விட்டு விடக் கூடியவர். கவரிமானைப்போல வாழ்பவர். அதனால் தான் இரத்தினசிங்கத்தின் மகளான கௌசல்யாவை நான்

கடத்தவில்லை. அவளை அவர் மறைத்து வைத்திருக்கும் இடம் எனக்குத் தெரியும். நான் தீயவன் தான். பணத்திற்காக எதையும் செய்பவன் தான் ஆனால் அருணாசலம் ஐயாவின் விஷயத்தில் தலையிடமாட்டேன். அவர் கடவுள். இனிமேல் நான் இரத்தினசிங்கத்தின் மகளின் விஷயத்தில் தலையிட மாட்டேன். அவரை அழைத்து வரச்சொல் அந்தத் தருமவான் மானம் போய்விட்டதென்று நினைத்தாலே எனது குடும்பம் அழிந்து விடும். அருணாசலம் ஐயா, குற்றமில்லாதவர். தீயவனான நான் போய் உதவி கேட்டாலும் அது நியாயமானதாக இருந்தால் செய்து தருவார். சாதி சமயம் பெரிது சிறிது பார்க்காத கனவான் அவர்'' என்றான் சுந்தரலிங்கம்.

அவனது வார்த்தைகளை நினைக்க மாதவனுக்குத் திகைப்பாக இருந்தது. இரத்தினசிங்கம் ஊரில் உள்ள தனது இனத்தவர்கள், பெரியவர்கள், நண்பர்களிடம் சென்று தனது நிலையைக் கூறியபோது அவர்கள் பயம் காரணமாக மறுத்து விட்டனர். ஆனால் அருணாசலம் ஒப்புக்கொண்டனர். அவரின் துணிவை நினைக்க மாதவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவரின் மீது தீயவனான சுந்தரலிங்கம் வைத்திருந்த மரியாதையை எண்ணி மகிழ்ந்தவாறு அதைச் சொல்வதற்காக அருணாசலத்தின் வீட்டை நோக்கி நடந்தான் மாதவன்.

**28. ஆற்றானை ஆற்றென்(று) அலையாமை முன் இனிதே**
**கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே**
**ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத**
**தேர்ச்சியின் தேர்வினிய(து) இல்.**

ஒருசெயலைச் செய்ய முடியாதவனை அச் செயலைச் செய் என்று ஏலாமை இனிது. யமன் ஒருநாள் என்னைக் கொண்டு செல்ல்லான் என்றுணர்ந்து வாழுதல் இனிது. செல்வம்

அழிந்த போதும் பாவச் சொற்களைச் சொல்லாது வாழ்வது இனிது.

அன்று அருணாசலத்தின் கப்பலில் பொருட்கள் ஏற்றி முடிக்கப்பட்டுவிட்டன. அன்று கப்பலில் கொண்டு செல்லும் பொருட்களையும் பின்துறை முகத்தில் ஏற்றப்படும் பொருட்களைக் கணக்கெடுத்து ஏற்றுபவனுமாகிய சிவலோக நாதனின் தயார் காலமாகிவிட்டார். அதனால் அக்கப்பலில் வேலை செய்யும் பிரதான மாலுமியும் மரணவீட்டிற்குச் சென்றுவிட்டார். அதனால் இரண்டு தினங்கள் கழிந்த பின் கப்பலை கொண்டு சொல்லாம் என்று தீர்மானித்தார் அருணாசலர். அருணாசலத்தின் முகாமையாளர் வந்து சொன்னான், ‘‘சிவலோகநாதனுடன் பத்து வருடங்களாக வேலை செய்யும் தர்மராசாவை அனுப்பலாம்’’.

‘‘வேண்டாம். கப்பல் இரண்டு தினங்கள் தாமதமாகசி செல்வதால் நட்டமேதும் வராது. ஆனால் ஒரு செயலைச் செய்ய முடியதவனை அச் செயலைச் செய்யுமாறு கூறுவது துன்பமானது மடடுமல்ல நட்டமானதும் கூட. பணம் வரும்போகும். நான் பணத்திற்காகத் தொழில் செய்யவில்லை. என்னிடம் போதியபணம்’ உண்டு. தொழிலாளர்களுக்குத் தொழில் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே தொழில் செய்கிறேன். சிவலோகநாதனின் தாய் நேற்றுக் காலை என்னிடம் வந்து உரையாடிச் சென்றவர். இன்று இல்லை. இது தான் உலகம். யமன் எந்த வேளையிலும் வருவான். அவன் வரும்வேளையை யாரும் அறியமுடியாது. அதனால் அதை நினைத்துத் தான தர்மங்களைச் செய்வது தான் இனிது. பணம் சம்பாதிப்பது இனிதல்ல. தேடிய செல்வம் முழுவதும் அழிந்தாலும் பாவச்செயல்களைச் செய்யாதிருப்பதும் தீய சொற்களைப் பேசாதிருப்பதும் தான் இனிது’’ என்றவர்

முகாமையாளரைப் பார்த்துச் சொன்னார், “ உனக்கும் சிவலோக நாதனுக்கும் பல பிரச்சினைகள் உண்டென்பதை நான் அறிவேன். அதன் காரணமாக நீ பல பாவச்செயல்களைச் செய்கிறாய். தவறான கருத்துக்களைக் கதைக்கிறாய். இது கூடாது. ஒருவன் சாவைவிடத்துன்பமான துன்பம் வந்தாலும் தீய சொற்களைப் பேசக்கூடாது. தீயவற்றை நினைக்கவும் கூடாது. அப்படி வாழ்ந்தால் கடவுள் முன் வந்து உதவுவார்'' என்றார் அருணாசலம்.

**29. கயவரைக் கைகழிந்து வாழ்தல் இனிதே**
**உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே**
**எளியர் இவரென்(று) இகழ்ந்துரையா ராகி**
**ஒளிபட வாழ்தல் இனிது**

கீழ்மக்களை விலக்கி வைத்து வாழ்தல் இனிது. தான் மென்மேலும் உயர்வடைவதற்காக முயற்சித்தல் இனிது. வறியோரை இகழாது அவருக்கு உதவி செய்து புகழ்பெற்று வாழுதல் இனிது.

“ஐயா, நேற்று இரவு சிவன்கோவிலில் ஒருவர் திருடியதாக பிடித்துக்கட்டி பலர் அடித்தார்கள். அடிவாங்கியவர் செல்லத்துரையின் மகனின் மாமானராம். செல்லத்துரையின் மகன் ஏன் அந்த தீய குடியில் பெண்ணெடுத்தார்?'' என்று கேட்டான் மாதவன்.

“செல்லத்துரை பணத்திமிர் பிடித்தவன். அத்துடன் தீயசெயல்களையும் செய்பவன். அதனால் ஊரவன் அவனை கழித்து வைத்திருந்தனர். கீழ்மக்களோடு தொடர்பின்றி வாழ்வது தான் இனிது. செல்லத்துரையின் மகன் கோயிலுக்குச்சென்றபோது அவனைக்கண்டு காதல்கொண்டு திருமணம் செய்து விட்டான். அதனாலும் ஊரவர் அவர்களை

மதிப்பதில்லை. செல்லத்துரை என்னுடன் ஒன்றாகப் படித்தவன். உயிருக்குயிரான நண்பனாக இருந்தவன். பின் தீயவனாக மாறிவிட்டான். அதனால் அவனது உறவை நீக்கிவிட்டேன். பின் குடும்பத்தை வெறுத்து சாமியாராகச் சென்றபின் தீயகுணங்களைவிட்டுவிட்டு நல்லவனாக மாறிவிட்டான். இருப்பினும் ஊரவர்களும் இனத்தவர்களும் அவனை நல்லன் என்று நம்பவில்லை. உண்மையில் அவன் திருந்திவிட்டான். அதனால் அவனை மீண்டும் நண்பனாக்கிக் கொண்டேன். அவனது மகன் சூதாடுகிறான். மது பாணங்களைக் குடிக்கிறான். அதனால் அவனை விலக்கிவைத்துள்ளேன். அவனது மாமனைத் தான் கட்டி வைத்து அடித்தார்கள். தீயவர்களை நீக்கி வாழ்வது இனிதென்று நினைத்தாலும் அவர்களது தொல்லைகளை தாங்கிக்கொள்ளமுடியவில்லை'' என்றார் அருணாசலம்.

சிவகுமாரன் தான் மென்மேலும் உயர்வடைய வேண்டுமென்று முயற்சிக்கிறான். அவனது முயற்சிக்கு பலன் கிடைக்கிறது. அது இனிமையான விடயம். ஆனால் அவனது துர்நடத்தையால் அவனையும் அவனது முயற்சியையும் பணத்தையும் மக்கள் மதிப்பதில்லை. ஊரில் சிறிதாக வியாபாரம் செய்த கந்தவனத்தின் நேர்மையான முயற்சியையும் ஊக்கத்தையும் மக்கள் மதித்து அவனுக்கு உதவிகள் பலவும் செய்தனர். இன்று அவன் ஒர வர்த்தகனாகிவிட்டான். அவனை மக்கள் மதிக்கும் அளவிற்கு பெரும் வர்தகனான சிவகுமாரனை மதிப்பதில்லை. ஏனென்றால் அவன் வறியவர்களை மதிப்பதில்லை. மரியாதையாக கதைப்பதுமில்லை. வறுமை இன்று வரும். தளராத முயற்சியுள்ளவன் தனது மன உறுதியின் மூலம் முன்னேறி விடுவான். ஆனால் மற்றவர்களை மதிக்கத் தெரியாதவன். கெட்டழிந்து போவான். அவனுக்கு

ஆபத்து வந்தால் கூட உதவுவதற்கு ஆட்கல் இருக்கமாட்டார்கள்'' என்றார் அருணாசலம்.

**30. நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனி இனிதே**
**மன்றக் கொடும்பா(டு) உரையாத மாண்பினிதே**
**அன்றறிவார் யாரென்(று) அடைக்கலம் வெளவாத**
**நன்றியின் நன்கினிய(து) இல்.**

ஒருவர் செய்த உதவியை மறக்காமல் வாழ்தல் இனிது. நியாய சபையில் நடுவுநிலை நின்று தீர்ப்புக்கூறல் இனிது. யாரும் அறியாமல் அடைக்கலமாகக் கொடுத்த பொருளை அபகரிக்க நினையாமை நன்றி மறவாமையிலும் இனியது.

கதிரவேலுவின் மனைவி தெய்வயானை அன்று காலை தரதர மகள் கௌரியுடன் அருணாசலம் வீட்டிற்கு வந்தாள். அவர்களை அருணாசலம் மதிப்புடன் வரவேற்று ஆசனத்தில் அமரச் செய்தார். கதிரவேலு ஒரு காலத்தில் பெரும் வர்த்தகன். அவனிடம் ஒரு கப்பல் நின்றது. அதில் அவன் வெளிநாடுகளில் இருக்கும் பொருட்களை ஏற்றி வந்து வியாபாரம் செய்து வந்தான். அருணாசலத்தின் நண்பன் அவன். அவன் தான் அருணாசலத்திற்கு கப்பல் வாணிபம் கற்றுக் கொடுத்தவன் அதனால் அருணாசலம் எப்பொழுதும் கதிரவேலு செய்த உதவியை நினைத்து பூரிப்பர். திடீரென்று அருணாசலத்தின் கப்பல் கடற்காற்றின் வேகத்தில் அள்ளுண்டு சென்றுவிட்டது. பொருள் கொடுத்தோர் அருணாசலத்திடம் வந்து தமது பொருளுக்குரிய பணத்தை தரும்படி கேட்டனர். அருணாசலம் செய்வதறியாது தவித்தபோது கதிரவேலு வேண்டிய அளவு பணத்தை கொடுத்துதவினார். சில நாள் செல்ல காற்று வீசும் திசைக்கு தடுமாறிச்சென்ற அருணாசலத்தின் கப்பல் பாதுகாப்பாக பொருட்களுடன் வந்து சேர்ந்தது.

அச் சம்பவம் நடந்து இரண்டு வருடங்களின் பின் கதிரவேலுவின் கப்பல் பொருட்களுடன் சென்றபோது கடற்கொள்ளையர்கள் அவரின் கப்பலை கடத்திச் சென்றுவிட்டனர். மனமுடைந்த கதிரவேலு தனது சொத்துக்களை விற்று கடனை அடைத்தார். பின்பு முதல் இல்லாததால் சிறியதொரு பலசரக்குக் கடை வைத்து நடாத்தி வந்தார். அருணாசலம் வேண்டியளவு பணம் தருவதாகக் கூறியும் அவர் கப்பல் வியாபாரத்தை ஆரம்பிக்கவில்லை. அவ்வப்போது அருணாசலம் கதிரவேலுவிற்கு தேவையான உதவிகளைச் செய்தார். திடீரென்று ஒருநாள் அருணாசலத்தை அழைத்த கதிரவேலு தன்னிடம் இருந்த ஐம்பதாயிரம் ரூபாவை அருணாசலத்திடம் கொடுத்து " அருணா, எனது உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதனால் இப்பணத்தை உன்னிடம் தருகிறேன். இதைக்கொண்டு எனது மகளுக்கு நல்ல குணசாலியான மாப்பிளையாய்ப் பார்த்து திருமணம் செய்துவை" என்றார். அதன் பின் அவர் படுத்தபடுக்கையாகிவிட்டார்.

"ஐயா, எனது மகளிற்கு திருமணவயது வந்துவிட்டது. நாங்கள் பல இடங்களில் அவளுக்குத் திருமணம் பேசியும் சரிவரவில்லை. பெரிய உத்தியோககாரன் தேவையில்லை. நல்லதொரு விவசாயி ஆனாலும் பறவாயில்லை" என்று தெய்வயானை கூறும் போது அருணாசலம் இடைமறித்துக் கூறினார். "எனது அண்ணானின் மகன் பொறியியலாளராக வெளிநாடொன்றில் பணி புரிகிறான். அடுத்தவாரம் இங்கே வருகிறான். அவன் வந்ததும் திருமணத்தை முடிக்கலாம். கதிரவேலு மகளின் திருமணத்திற்கென்று பல வருடங்களுக்கு முன் ஒர தொகைப் பணத்தைத் தந்தவர். அதைப் பற்றி யாருக்கும் சொல்லக் கூடாது என்றவர். அப்பணம்

திருமணத்திற்கு போதும்''. என்றார். தெய்வயானை ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் தரதர கணவன் பணம் கொடுக்காவிட்டாலும் அருணாசலம் கொடுத்ததாகக் கூறுவார் என நினைத்தாள்.

அடைக்கலமாக யாருக்கும் தெரியாது கதிரவேலு கொடுத்த பணத்தைப் பற்றி அவர் எந்நாளும் நினைத்துக்கொண்டிருந்தார். அதைக் கொடுக்கப்போவதை நினைத்து அவரது மனம் மகிழ்ந்தது.

**31. அடைந்தார் துயர் கூறா ஆற்றல் இனிதே**
**கடன் கொண்டும் செய்வன செய்தல் இனிதே**
**சிறந்தமைந்த கேள்விய ராயினும் ஆராய்ந்து**
**அறிந்துரைத்தல் ஆற்ற இனிது.**

தம்மிடம் அடைக்கலம் புகுந்தவரை துன்பப்படாது வாழ வைத்தல் இனிது. கடன்பட்டாவது செய்ய வேண்டியவற்றை செய்தல் இனிது. நிறைந்த நூலறிவுள்ளவரானாலும் பதில் கூறும் போது நன்றாக ஆராய்ந்தபின் கூறுதல் இனிது.

''ஐயா, எனது கணவன் என்றோ செய்த சிறுஉதவியை இன்றும் நினைத்து நன்றியுடன் வாழ்கிறீர்கள். எனது கணவன் நீங்கள் கஸ்ரப்படும்போது தந்தபணத்தை என்றோ தந்துவிட்டீர்கள். எனது கணவன் நோய் ஏற்பட்டு இயங்கமுடியாத நிலை ஏற்பட்டபோது நாம் உங்களை நம்பி வந்தோம். எமக்கு அடைக்கலம் தந்து எமது தேவைகளையெல்லாம் நிறைவேற்றி வைத்துள்ளீர்கள். உங்கள் அண்ணனின் குடும்பம் மிகவும் பெரிய பணக்காரக் குடும்பம். அதைவிட உங்கள் அண்ணனின் மகன் பெரும் உத்தியோகத்தன். அவனை எனது மகளின் மாப்பிள்ளை என்கிறீர்கள். அதை எம்மால் நம்பமுடியவில்லை'' விம்மினாள் தெய்வையானை.

“அன்று எனது கப்பல் தொலைந்தபோது உங்கள் கணவர் எந்தப்பிரதி பலனையும் எதிர்பாராமல் உதவினார். தொலைந்த கப்பல் திரும்பி வந்தமையால் தான் நான் இந்தநிலையை அடைந்தேன். திரும்பிவராவிட்டால் நானும் உங்களைப்போலத் தான் இருந்திருப்பேன். அதனால் தான் உதவி செய்கிறேன். உங்கள் கணவரின் உதவியால் தான் எனது சகோதரன் நல்ல நிலையை அடைந்தான். அவரே தனது மகனுக்கு கௌரியை என்னிடம் பெண் கேட்டார். நான் பொம்பிளைப் பகுதியை சேர்ந்தவர் என்று அவர் நினைக்கிறார்”. என்று சிரித்தார் அருணாசலம்.

தெய்வையானை எதுவும் பேசவில்லை. அதனால் அருணாசலம் கௌரியைப் பார்த்துக்கேட்டார் “ கௌரி, உனக்கு முகுந்தனைத் தெரியும். அவனை திருமணம் செய்ய உனக்கு விருப்பமா.........? பெண்ணின் விருப்பத்தை அறியாது நாம் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது........”

கௌரி வெட்கத்துடன் சிரித்தாள். “ எனது மகள் நான் தேர்ந்தெடுக்கும் மாப்பிளையை விரும்புவாள். என்ன கௌரி” என்று கேட்டால் தெய்வயானை.

தலை குனிந்து நின்ற கௌரி சிரமப்பட்டு “ம்” என்றாள்.

“எதையும் உரிய நேரத்தில் செய்ய வேண்டும். செய்யப் பண வசதியில்லா விட்டால் கடன் பட்டு செய்தல் வேண்டும். கடன்படக் கூடாதென்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் செயலை உரியநேரத்தில் செய்ய வேண்டும். அதற்காக கடன் படுவது இனிது”. என்றார் அருணாசலம்.

“ம்” என்று கௌரி சொன்னது அருணாசலத்திற்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. சில பெண்கள் மனதில் உள்ள விடயங்களை வெளிப்படையாக சொல்லமாட்டார்கள். பின் திடீர்முடிவுகள் எடுப்பார்கள் என நினைத்துச் சொன்னார். “கௌரி, நீ வீட்டுக்குச் சென்று ஆறுதலாக யோசித்து முடிவெடுத்தபின் உனது தாயாருக்குக் கூறு. அவா வந்து எனக்கு கூறுவா. உனது மனதில் வேறு எண்ணங்கள் இருந்தால் சொல். மாப்பிளை குடிக்கவிட்டால் உனக்கு பிடிக்கக் கூடிய மாப்பிளையை தேடித்தருவது எனது பொறுப்பு. நிறைந்த அறிவாளியாக இருந்தாலும் சபையில் யாராவது ஒருவர் கேள்வி கேட்டால் அதைச் சுலபமாக நினைத்து பதில் கூறலாகாது. கற்றவன் அதைப் பற்றி நன்கு ஆராய்ந்த பின்பே பதில் கூறுவான். இல்லாவிட்டால் சில சமயம் பதில் பொருத்தமில்லாதிருக்கும். அதனால் வீட்டிற்குச் சென்று நன்கு யோசித்து முடிவெடு” என்றார் அருணாசலம்.

தெய்வையானை எதையோ சொல்ல வாய் உண்ணினான். அதை அவதானித்த அருணாசலம் சொன்னார் “ திருமண விடயம் நன்கு ஆராயப்படவேண்டும். ஆணும் பெண்ணும் நன்கு ஆராய்ந்து முடிவெடுக்கட்டும்” என்றார்.

**32. கற்றறிந்தார் கூறும் கருமப்பொருள் இனிதே**
**பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன் இனிதே**
**தெற்றென இன்றித் தெளிந்தாரைத் தீங்(கு) ஊக்காப்**
**பத்திமையில் பாங்கினியது இல்.**

நூல்களைக் கற்றறிந்த அறிஞர் கூறும் பொருள் இனிது. குடிகளிடம் அன்பில்லாத அரசன் ஆட்சியில் வாழாமை இனிது. உண்மை நிலையை உணராது கெடுதி செய்பவர்களை மன்னிப்பது இனிது.

தெய்வயானை வீட்டிற்கு வந்து கௌரிக்கு சொன்னாள் “அருணாசலம் ஐயா அப்படி ஏன் சொன்னார் என்று புரியவில்லை. ஒரு கன்னிப்பெண் தனது திருமணவிடயத்தை ஒருபோதும் பிறரிடம் கூறமாட்டாள். தனது இனத்தவர்கள் கேட்டாலும் சொல்லாமாட்டாள் என்பது அவருக்குத் தெரியாதா? அவர் ஒருபோதும் குற்றம் சொல்வதில்லை. பிறரை கேலி செய்வதில்லை. விளையாட்டாக கோபிப்பதுமில்லை. அப்படிப்பட்ட மனிதனையும் பலர் குறைகூறுகிறார்கள். செல்லத்துரையின் மகன் ஏனோதெரியவில்லை அவரைக் குறைகூறிக்கொண்டு திரிகிறான். செல்லத்துரையின் போக்கு இப்போ சரியில்லை. கண்ட கண்ட வீடுகளில் பிச்சை எடுக்கிறான். இது அவைக்கு சரியான அவமானம். தாயும் மகளும் வந்து செல்லத்துரைக்கு புத்திமதிகள் கூறச் சொன்னவர்களாம். அருணாசலம் ஐயா கூறவில்லை. அதை அவர்கள் வேறுவிதமாகக் கதைக்கிறார்கள். அருணாசலம் சொன்னால் செல்லத்துரை கட்டாயம் கேட்கும். தான் புகழோடு வாழ விரும்பித் தான் செல்லத்துரைக்கு புத்திமதிகள் கூற அருணாசலம் விரும்பவில்லையென்று செல்லத்துரையின் சகோதரன் கூறுகிறான். அதை செல்லத்துரையின் மனைவியும் பிள்ளைகளும் அமோதிக்கிறார்கள். இவற்றை நன்கு அறிந்தும் அவர்கள் மீது கோபப்படாமல் அருணாசலம் உதவிகள் செய்து வருகிறார். அப்படியானவர் உன்னை வீட்டிற்குச் சென்று ஆறுதலாக ஆராய்ந்து முடிவெடு என்று ஏன் சொல்வான்? அது எனக்குப் புரியவில்லை”.

“ அம்மா அருணாசலம் மிகவும் உயர்ந்தவர். ஒழுக்கசீலர். கற்றறிந்தவர். அப்படியானவர் கூறும் கருத்தில் நிறையப் பொருள் இருக்கும். திருமணம் என்பது ஆண் பெண் இருவரும் இணைந்து நூறாண்டுகள் இன்பமாக வாழ்வது. இன்று

நான் பேசாமல் மௌனமாக இருந்தேன். மௌனம் சம்மதம் என்றும் கொள்ளலாம், சம்மதிமில்லையென்றும் கொள்ளலாம். அழகான பொருள் நிரம்பப்பெற்ற பெரிய உத்தியோகத்தில் உள்ளவனானாலும் சில பெண்களுக்கு ஏனோ அவர்கள் மீது விருப்பமிராது. அதற்காக அவர்கள் அவள் வேறு எவரையோ விரும்புகிறாள் என்றும் கருதலாகாது. மனதிற்குப் பிடித்த உணர்வுகள் தான் காதல், திருமணம். எனக்கு அவரைப் பிடிக்காமல் இருக்கலாம். அல்லது நான் ஒருவரை விரும்பலாம் என்று அவர் நினைத்திருப்பர். மனதால் கூட தீயவற்றை எண்ணாத பெரியவரான அவர் கூறியதை பெரிதாக எடுக்காதே. குடிகளை வருத்துகின்ற அரசனின் கீழ் வாழ்வதைவிட கொடிய விலங்குகள் உள்ள காட்டில் வாழ்வது இனிது என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதுபோல மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு நட்புக்கு மகிழ்வதாக பேசாத தன்மையுடைய அருணாசலத்தின் வார்த்தைகள் மேலானவை. அவற்றில் வஞ்சகமும் இல்லை. சூதும் இல்லை. கொடுமையும் இல்லை. அதனால் நாளை காலை சென்று முகுந்தனைத் திருமணம் செய்ய எனக்கு விருப்பமென்று கூறு'' என்றாள் கௌரி.

**33. ஊர்முனியா செய்தொழுகும் ஊக்கம் மிக இனிதே**
**தானே மடிந்திராத் தாளாண்மை முன் இனிதே**
**வாள்மயங்கு மண்டமருள் மாறாத மாமன்னர்.**
**தானை தடுத்தல் இனிது.**

ஊரார் வெறுக்காத நல் செயல்களைச் செய்தல் இனிது. தானே முயற்சித்து முன்னேறுவது மிக இனிது. பலம் மிக்க அரசர்களது பெருஞ்சேனையுடன் போரிடாது தவிர்த்தல் இனிது.

அன்று காலைப்பூசை முடிவடைந்ததும் மாதவன் அருணாசலத்தின் உதவியாளன் என்பது செல்லத்துரைக்குத்

தெரியும். அதனால் செல்லத்துரை, ‘‘அருணாசலம் நலமாக இருக்கிறாரா?’’ என்று கேட்டார்.

‘‘ஓம். அவருக்கென்ன குறை. நல்ல மனைவி, பிள்ளைகள் பெற்றோர், சகோதரர்கள் அவரின் விருப்பத்திற்கு மாறாக அவர்கள் யாரும் நடப்பதில்லை. அவர் ஊரவர்களை நினைத்துத் தான் துன்பப்படுவார்’’ என்று நிறுத்திய மாதவன் தயங்கினான். பின்பு, ‘‘உங்களுடன் சிலகதைகள் கதைக்க விருப்பம்’’ என்றான்.

‘‘நான் பரதேசி. நீ எதையும் கதைக்கலாம்’’ என்றார் செல்லத்துரை.

ஐயா, உங்கள் மனைவியும் பிள்ளைகளும் அருணாசலம் ஐயாவிடம் வந்து நீங்கள் கண்டகண்ட வீடுகளில் உணவு பெற்று உண்பது தமக்கு அவமானம் என்றும், அப்படிப் பெற்று உண்ண வேண்டாம் என்று உங்களுக்குக் கூறுமாறு சொன்னார்கள். அருணாசலம் ஐயா யாருக்கும் புத்திமதி சொல்வதில்லை. அதனால் அவர்கள் அவர் மீது கோபம் கொள்கிறார்கள். ஊரவர்கள் எவருக்கும் உங்கள் செயல் பிடிப்பதில்லை. அவர்கள் நீங்கள் குடும்பத்தின் மீது கொண்ட வெறுப்பால் அவர்களைப் பழிவாங்குவதற்காக அப்படிச் செய்வதாகக் கூறுகின்றனர். சிவனடியார் ஒருவர் பிச்சை ஏற்று உண்பதை யாரும் குறை சொல்லமாட்டார்கள். அவர்கள் எவரும் உங்களைச் சிவனடியாராக ஏற்வில்லை. அதனால் ஊரவர் பழிக்கும் செயல்களைத் தயவு செய்து செய்யாதீர்கள். எவரின் துணையையும் நாடாது தனித்து நின்று முயன்று முன்னேறியதாக அருணாசலம் ஐயா அடிக்கடி சொல்வார். சோம்பலில்லாது இரவுபகலாக முயற்சித்து முன்னேறுவதும்,

ஊரவரின் வெறுப்புக்களாகமல் வாழ்வதும் மிகமிகஇனிதென்று பெரியவர்கள் சொல்வார்கள். அதன்படிவாழுங்கள். கோயில் மடத்தில் உணவு கொடுக்கும் போது ஏன் நீங்கள் இருக்கக்கூடாத இடங்களுக்குச் சென்று இருக்கிறீர்கள். சிவனடியாரான நீங்கள் மற்றவர்களின் மனங்களைப் புண்படுத்தக் கூடாது''.

சில கணங்கள் செல்லத்துரை பேசவில்லை, ''நீ சொல்வது உண்மைதான், பணம், பொருள், குடும்பம், இனசனம் எல்லாவற்றையும் வெறுத்த நான் உணவு உண்பதையும் வெறுத்தல் வேண்டும். பலமுள்ள அரசனோடு போரிடாது அடங்கியிருத்தல் இனிமையானது என்று பெரியவர்கள் கூறுவர். அதுபோல பலமுள்ள எனது குடும்பத்தவர்கள், உற்றார் உறவினரு....... மாறுபாடடைய நான் விரும்பவில்லை. அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்து அவர்களுக்கு வரும் நன்மைகளையும் தடை செய்ய நான் விரும்பவில்லை. உண்மை நிலையை எனக்குணர்த்திய உன்னை, நான் வணங்கும் சிவனாகவே காண்கின்றேன். மிகவும் நன்றி'' என்றார் செல்லத்துரை அவரது குரல் தளர்ந்தது. கண்களால் நீர் பெருகியது. அதைக் கண்ட மாதவன், ''நான் தவறாக ஏதாவது சொல்லியிருப்பின் என்னை மன்னியுங்கள்'' என்று கூறி அவரது பாதங்களைப் பற்றினான்.

**34. எல்லிப் பொழுது வழங்காமை முன் இனிதே
சொல்லுங்கால் சோர்வின்றிச் சொல்லுதல் மாண்பினிதே
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுதல் இனிது.**

இரவில் வழி நடவாமை மிக இனிது. மறதியில்லாமல் வாழ்வது இனிது. தாமாக வந்து நட்புக் கொண்டாலும்

தீயவரது நட்பைக் கொள்ளாமை இனிது. இரவு ஏழு மணிக்குத் தெய்வானை கௌரிக்குச் சொன்னாள், “ உனக்கு முகுந்தனைத் திருமணம் செய்யவிருப்பமென்று நான் அருணாசலம் ஐயாவுக்குச் சொல்லி விட்டு வருகிறேன்”.

“அம்மா இரவில் எங்கும் செல்லாதிருத்தல் இனிதென்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். போன கிழமை இரவு ஏழுமணிக்கு நாகராசாவின் மகனுக்கு தாகம் தீண்டியது. மிகவும் ஆபத்தான நிலையில் இருந்து அதிட்டவசமாகப் பிழைத்து விட்டான். சமீபத்தில் இரவுவேளை சென்ற சிவலிங்கத்தை தெருவால் சென்ற வாகனம் ஒன்று மோதிவிட்டுச் சென்றுவிட்டது. இரவு பத்து மணிக்குப் பிறகு வீட்டார் சிவலிங்கத்தைக் காணவில்லையென்று தேடிக்கண்டு பிடித்தவை. ஆண்களே இரவில் பயணம் செய்வது நல்ல தல்ல. பெண்ணான நீ இரவில் சென்றால் அருணாசலம் ஐயா பேசுவார். விடிந்த பின்னென்று சொல்லலாம் தானே” என்றார் கௌரி.

“பொன்னுச்சாமியின் மகள் மாலதி அடிக்கடிவந்து உன்னைச் சந்திக்கிறாள். பொன்னம்பலம் குடிகாரன். தீயவன். நீ ஏன் அவளுடன் நட்பு வைக்கிறாய்? அவள் நல்லவளாக இருந்தாலும் தகப்பன் தீயவன். அவனை ஊரில் யாரும் மதிப்பதில்லை. அத்துடன் அவர் குணநாதனின் மகனுடன் காதலாம். குணநாதனின் மகளின் நடத்தையும் சரியில்லையென்று ஊரில் பேசிக்கொள்கிறார்கள்.

இதை அருணாசலம் அறிந்தால் வேதனைப்படுவார். தாமாக வந்து நட்புக்கொண்டாலும் ஒருவரை ஆராயாது நட்புக்கொள்ளக் கூடாது. மாலதி தரதர காதலனைக் காண்பதற்காகத் தான் அடிக்கடி வீதியால் திரிகிறாள். யாராவது

கேட்டால் உன்னிடம் ஏதோ அலுவலாக வருவதாகக் கூறுகிறாளாம். பாக்கியம் அவளை அவதானித்து விட்டு எனக்குச் சொன்னாள். இனிமேல் அவளைச் சந்திக்காதே. வீடு தேடிவந்தால் நிலமையை எடுத்துக்கூறு. நாளைக்கு அவள் அவனோடு சென்று விட்டால் சனம் நீ தான் கூட்டிவிட்டதாய்ச் சொல்லும். அதனால் பல பிரச்சினைகள் வரலாம்'' என்றாள் தெய்வானை. அப்போது தெய்வானையின் மூத்த சகோதரன் இரத்தினம் அங்கே வந்தார் ''அவசரத்தேவைக்காகப் பணம் கொஞ்சம் கேட்டேன். மாலை நான்கு மணிக்கு முன் கௌரியிடம் கொடுத்தனுப்புவதாகச் சொன்னாய். அவள் கொண்டு வந்து தரவில்லை. எனக்கு மிக அவசரமாகத் தேவைப்பட்டதால் தான் கேட்டேன். இப்போ செல்வராசாவிடம் மாறிவிட்டேன்'' என்றார் இரத்தினம்.

''கௌரி'' என்று கோபமாக அழைத்தாள் தெய்வானை. இந்த வயதில் உனக்கென்ன மறதி. காலையில் பணம் தந்து மாமாவிடம் கொடுக்கச் சொன்னேன். அவர் அவசரதேவையென்றவர். பணம் இருந்தும் உனது மறதியால் அவர் அவமானப்பட்டுப்போனார். உனக்கு உப்படிச் சொன்னாலும் புரியாது. உன்ரை நிலை தெரிந்தும் சொன்ன என்னைத் தான் செருப்பால் அடித்தல் வேண்டும்'' என்று அழுதாள் தெய்வானை.

இரத்தினம் கௌரியைக் கோபமாக முறைத்துப் பார்த்துவிட்டு பணத்தை வாங்காது சென்றார்.

தெய்வானை விக்கி விக்கி அழுதாள். அவளால் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**35. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரிதல் முன் இனிதே**
**முற்றான் தெரிந்து முறைசெய்தல் முன் இனிதே**
**பற்றலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்**
**வெற்றிவேல் வேந்தர்க்கு இனிது.**

ஒற்றரினால் வேவுபார்த்து நிலைமையை ஆராய்ந்து பார்த்தால் அரசர்க்கு இனிது. தானே குற்றத்தை ஆராய்ந்து தண்டனை கொடுத்தல் மிக இனிது. பக்கம் சாராது எல்லோரையும் சமமாக மதித்துத் தீர்ப்புக்கூறல் அரசர்க்கு இனிது.

அருணாசலம் அன்று ஓய்வாக இருந்தார். ஓய்வு நேரங்களில் அவர் அரச கதைகளைப் படிப்பர். முன்னைய அரசர்களின் வீரதீரங்களைப் பற்றியும் அவர்கள் வழக்குகளை சமயோசிதமாகவும் புத்திசாலித்தனமாகவும் நீதிவழுவாது வழங்கிய தீர்ப்புக்களையும் எண்ணி ஆச்சரியப்படுவர். ஒற்றர்கள் தம் உருமாறிச் சென்று உரிய தகவல்களைச் சேகரித்த விதம் அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும். ஒற்றர்களின் அர்ப்பணிப்பான சேவை இல்லாது விட்டால் அரசர்களால் எதுவும் செய்யமுடியாதநிலை அன்றிருந்தது.

அந்தநூலை வாசிக்கத்தொடங்கினார். ஒற்றன் என்பவன் அன்பு அறிவு ஆராய்ந்து சொல்கின்ற சொல்வன்மை ஆகியன நிறைந்திருப்பதோடு ஒரு நாட்டுக்கு தூது சென்று தனது நாட்டை ஆளும் அரசனது வெற்றிக்கு ஏற்ற காரணங்களை எடுத்துச் சொல்பவன். மிகக் கற்றவர்களைவிட அதிகம் கற்றவனாக இருத்தல் வேண்டும். இயற்கையான அறிவு காண்பவர்களை கவரும் தோற்றம் ஆராய்ந்து அறிந்து முடிவெடுக்கக்கூடிய வல்லமை உள்ளவனே தூது செல்வதற்கு தகுதியானவன். தான் அறிந்த தகவல்களை தொகுத்துச்

சொல்லியும் பயனற்றவற்றை நீக்கியும் மகிழ்ச்சி ஏற்படுமாறு கூறி தனது நாட்டுக்கு வெற்றியைத் தேடிக் கொடுப்பவனே உண்மையான தூதுவன்.

கற்க வேண்டியவற்றைக் கற்று பகைவரின் கொடிய செயல்களுக்கு அஞ்சாமல் சொல்பவற்றை கேட்பவர்கள் உள்ளத்தில் ஆழப்பதியுமாறு சொல்லி காலத்தை அறிந்து அதற்கேற்ப செயல் புரிபவனே தூதன். அத்துடன் தரதர கடமையை இன்னதென்று உணர்ந்து அதை செயலாக்குவதற்குரிய காலத்தையும் பொருத்தமான இடத்தையும் அறிந்து தெரிந்த முடிவை எடுத்துச் செயற்படுபவனே ஒற்றன். எவ்வேளையிலும் தவறான முடிவை எடுக்காத தன்மையும் தனது அரசனின் சொற்களை மற்ற வேந்தர்களுக்கு புரியும்படி கூறத்தக்கவனே சிறந்த ஒற்றன்.

தனக்கு அழிவு வந்த வேளையிலும் அதற்கு அஞ்சாமல் செய்யவேண்டியவற்றை உறுதியுடன் செய்து தனது நாட்டிற்கு நன்மை உண்டாக்கும் தூதுவனே அரசர்க்கினிய தூதுவன் ஆவான். அத்தகைய ஒற்றனை பெற்ற மன்னன் தான் விரும்பிய நாடுகளையெல்லாம் கைப்பற்றுவான்.

‘‘ஒற்றனின் உறுதியான செயற்பாட்டை நன்கு ஆராய்ந்து அதன்பின் தான் முடிவெடுத்து செயற்படும் அரசன் மக்களுக்கு இனியவன் ஆவான். அத்துடன் நாட்டை ஆளும் அரசன் பற்றில்லாதவனாக இருந்து ஒரு தவசியைப்போல் முடிவெடுத்தல் வேண்டும். பக்கம் சார்ந்து நடுநிலையின்றி தீர்ப்புக் கூறுபவனின் ஆட்சி விரைவில் அற்றுப்போய்விடும்’’ என்றிருந்தது. அப்போது யாரோ வந்து அழைக்கும் சத்தம் கேட்டது. அதனால் அருணாசலம் புத்தகத்தை மூடிவைத்து விட்டு வெளியே வந்தார்.

**36. அல்வித்(து) அழுக்கா(று) உரையாமை முன்இனிதே**
**செவ்வியனாய்ச் செற்றுச் சினங்கடிந்து வாழ்வினிதே**
**கவ்வித்தாம் கொண்டுதாம் கண்டது காமுற்று**
**வவ்வார் விடுதல் இனிது.**

மனதில் அவாக் கொண்டு பொறாமையான சொற்களை பேசாதிருத்தல் இனிது. அதுபோல மன எழுச்சியினால் சினங் கொள்ளாது அமைதியாக பேசுதல் இனிது. பிறரின் பொருட்களின் மீது ஆசை கொண்டு அதை அபகரிக்க முயலாமை இனிது.

செல்லத்துரை அருணாசலத்தை சந்திக்க வந்திருந்தார். அவர் வந்தமர்ந்த சில நிமிடங்களில் செல்லத்துரையின் மனைவியும் பிள்ளைகளும் வந்தனர்.

“அருணா, எனது சொத்து விடயத்தில் எனது மனைவியும் பிள்ளைகளும் என்னைத் தவறாக நினைக்கின்றனர். முழுவதும் நான் தேடிய சொத்து. நான் பாகுபாடின்றி நடுவு நிலை நின்று எனது சொத்துக்களை பங்கிட்டுப் பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் கொடுத்துள்ளேன். நிலங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள் யாவும் பணப்பெறுமதியில் கணக்கிடப்பட்டுப் பிரிக்கப்பட்டுள்ளன எனக்கென நான் எதையும் வைக்கவில்லை. அதைவிட நான் எனது சகோதரிக்கும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொஞ்சப்பணம் விரும்பிக் கொடுத்துள்ளேன். நான் உழைத்த சொத்தை நான் யாருக்கும் கொடுக்கலாம். இதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை. மனம்போனபடி நடக்கக்கூடாது, மனம்போனபடி நடக்கக்கூடாது, மனம் போனபடி கதைக்கக்

கூடாது. மன எழுச்சியுடன் முடிவெடுக்கக் கூடாது. அப்படி வாழ்வது தான் இனிமையான வாழ்க்கை. இவர்கள் பொறாமைப்படுகின்றார்கள், சந்தேகப்படுகிறார்கள். அதனால் கண்டபடி பேசுகிறார்கள். தவறான முடிவுகளை எடுக்கிறார்கள். மன எழுச்சியின்றி நிதானமாக யோசித்தால் எல்லாம் புரியும். அதைவிட்டு விட்டு அடுத்தவர்களின் பொருளை அடைய முயற்சிப்பது பாவத்தையும் பழியையும் உண்டாக்கும். என்பதைப் புரிந்து கொள்கிறார்களில்லை. பொறாமைப்படாது வாழ்தல், சினம் கொள்ளாது வாழ்தல், அடுத்தவனின் பொருளில் ஆசை கொள்ளாமல் வாழ்தல் என்பன தான் இனிமையான வாழ்க்கை. இதைவிடுத்து பொறாமை கொண்டு அதனால் அவாப்பட்டு நல்ல வாழ்வைக் கெடுக்கிறார்கள். இதைச் சொன்னாலும் புரிந்து கொள்கிறார்கள் இல்லை. எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. நான் அடியவர்களுடன் இன்று மாலை இமயமலைக்குப் புறப்படுகின்றேன். நான் கண்ட மனிதருள் நீ தான் நல்ல குணங்களுடன் வாழ்கிறாய். உனது வாழ்க்கை புனிதமானது. அதனால் உன் முன்னிலையில் எனது எண்ணங்களைக் கூறியுள்ளேன். நான் இனித்திரும்பி இவ்வூருக்கு வரமாட்டேன். அதனால் என்னில் உள்ள சந்தேகங்கள் இவர்களுக்கு இன்று நீங்காவிட்டால் என்றும் நீங்காது. அதனால் தான் சொன்னேன். சொத்து சுகம் மனைவி மக்கள் எல்லாவற்றையும் துறந்த எனக்கு இவர்கள் என்ன நினைத்தாலும் பரவாயில்லை. ஆனால் சொத்து விடயமாக இவர்கள் தம் ஆயுள் முழுவதும் பிரச்சினைப் படுவதை நான் விரும்பவில்லை. இனி இவன் செயல்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் செல்லத்துரை.

**37. இளமையை மூப்பென்(று) உணர்தல் இனிதே**
**இளைஞர்மாட்(டு) அச்சின்மை கேட்டல் இனிதே**
**தடமென் பணைத்தோள் தளரிய லாரை**
**விடமென்றுணர்தல் இனிது;**

தனது இளமைப் பருவத்தை முதுமைப் பருவம் என எண்ணுதல் இனிது. சுற்றத்தவர்கள் அன்பாகப் பேசுவதைக் கேட்டல் இனிது. மூங்கிலை ஒத்த தோள்களையும் தளிரைப்போன்ற மென்மையான தன்மையை உடைய மகளிரை நஞ்சென நினைத்தல் இனிது.

செல்லத்துரையின் மனைவி விம்மி விம்மிப் பலமாக அழுதாள். பதிலை எதிர்பாராது வெளியே சென்ற செல்லத்துரை அவளின் அழுகுரல் கேட்டுத் திரும்பிவந்து சொன்னார், ‘‘நீ உண்மையை உணர்ந்து அழுதால் நான் நிம்மதியும் மகிழ்ச்சியும் கொள்வேன். பணம் சம்பாதிப்பதில் நான் தீவிரமாக இருந்தேனே தவிரப் பெண்கள் விடயத்தில் நான் முதுமையடைந்த கிழவனாகத் தான் வாழ்ந்தேன். எனக்கு அளவுக்கதிகமான பண ஆசை இருந்தது. அதனால் பணத்தைச் செலவு செய்யாது சேமித்தேன். நான் யாருக்கும் தான தர்மம் செய்யவில்லை. கோயிலுக்குக் கூடக் கொடுக்கவில்லை. உணவுக்குக் கூடப் பெரிதாகச் செலவு செய்யவில்லை. ஆடம்பரமாக வாழவில்லை. பெண்களுடன் தொடர்பு வைத்தால் எனது பணம் அழிந்து விடுமென்று நினைத்தேன். அதனால் நான் முதுமையானவன் என நினைத்து வாழ்ந்தேன். எனது தாயாரின் சகோதரியின் மகள் நல்ல அழகி. வறுமைகாரணமாக அவளுக்குத் திருமணம் நடைபெறாதிருந்தது. அவளது தகப்பன் எனது கால்களைப் பற்றிப்பிடித்துத் தனக்குதவி செய்யுமாறு பலமுறை இரந்தமையால் அவளுக்குத் திருமணம் செய்து

வைத்தேனே தவிர நான் அவர்களின் வீட்டிற்கு கூடச் செல்லவில்லை. மூங்கிலைப்போன்ற தோல்களையும் மென்மையான தாமரை போன்ற மேனியையும் உடைய பெண்களை நான் நஞ்சாகக் கருதினேன். எனது இனத்தவன் ஒருவன் பெருந் தனவந்தன். அவன் பெண்ணாசை கொண்டவன். அவனின் அந்த ஆசையைத் தெரிந்து கொண்ட தீயவர்கள் பெண்களை அழைத்து வந்து அவனிடம் கொடுத்து பணம் பெற்றனர். ஓரிரு வருடங்களின் பின் அவன் பிச்சைக்காரன் ஆகிவிட்டான். உண்ணக் கூட உணவில்லாமல் தெருத்தெருவாக அலைந்து திரிந்து தெருவில் இறந்தான். அவனது சடலத்தை எடுத்து அடக்கம் செய்யக் கூட யாருமில்லை. பெண்களோடு சேர்ந்தால் இந்தநிலை தான் எனக்கு வரும் என்று எண்ணியதால் தான் நான் பெண்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால் சுற்றத்தவர்கள் நான் செய்யாதவற்றையெல்லாம் செய்ததாக கதைத்ததால் தான் நான் சுற்றத்தாருடன் வெறுப்பாக நடந்து கொண்டேன். அருணாசலத்தைப் போல சுற்றத்தவர்களுடன் அன்பாக நடப்பது தான் இனிது என்று இப்போது நினைக்கிறேன். காலங்கடந்த யோசனை அது. இனி அதை நினைத்து பிரியோசனமில்லை. எல்லாவற்றையும் ஆறுதலாகவிருந்து யோசியுங்கள். என்னில் குற்றமில்லாதது தெரியும்'' என்றார் செல்லத்துரை.

**38. சிற்றாள் உடையான் படைக்கலம் மாண்பினிதே**
**நட்டார் உடையான் பகையாண்மை முன் இனிது**
**எத்துணையும் ஆற்ற இனிதென்ப பால்படும்**
**கற்றா உடையான் விருந்து.**

சிற்றாள் உடையவனது ஆயுதம் மாட்சிமைப்பாடல் இனிது. சுற்றத்தாரை உடையானது பகையை ஆளுந்தன்மை இனிது. பால் மிகக்கறக்கும் பசுவை உடையாளது விருந்து இனிது.

படைகளின் வீரம் மன்னனுக்கு இனிது. நெருங்கிய சுற்றத்தவர்கள் இருப்பவனுக்கு பகை இனிது. பசு வைத்திருப்போனின் வீட்டில் உணவு உண்பது இனிது என்று பெரியார்கள் சொல்வார்கள். இவற்றையெல்லாம் நான் காலங்கடந்து தான் உணர்ந்து கொண்டேன். நான் எனது சிற்றாள்களை மதிப்பதில்லை. அதனால் அவர்கள் சம்பளத்திற்காக வேலைசெய்தனரே தவிர விரும்பிச் செய்யவில்லை. அவர்களை விருப்புடன் செயற்பட நான் விடவில்லை. நிர்வாகிகள் பலர் எனது போக்கைப் பற்றி தயங்கித் தயங்கி கூறினார்களே தவிர உரிமையுடன் கூறப் பயப்பட்டனர். சிலர் சிற்றாள்களுடன் சேர்ந்து கொண்டனர். ஆனாலும் அதிகார வெறியும் எனது கண்களை மறைத்துள்ளன. சிற்றாள்கள் விருப்புடன் தொழிலைச் செய்தால் தான் நாடு முன்னேறும் என்பதை அரசர்கள் உணர வேண்டும். சிற்றாள்களை விருப்புடன் வேலை செய்தால் தான் முதலாளி முன்னேறுவான். தொழில் சிறக்கும் என்பதை உணராத நான் பெருமையையும் புகழையும் இழந்துவிட்டேன். அத்துடன் தன்னைச் சுற்றியுள்ளவர்களும் இனசகசகபந்துக்களும் அன்புடன் கூடியிருந்தால் எந்தப் பகைவனையும் இலகுவாக வெல்லலாம் . இவர்களை வெறுத்து ஒதுக்கினால் அவர்களே காட்டிக்கொடுத்துவிடுவார்கள். எதிரிகளுடன் சேர்ந்து எமது பலவீனத்தை தெரிந்து பகையை வளர்ப்பார்கள். எனது வாழ்க்கையில் இது தான் நடந்தது. அருணாசலம் உனது

வீட்டிற்கு வருவோர் எல்லோருக்கும் நீ உணவு கொடுக்கிறாய். அவ்வுணவு மிகவும் சுவையுடையதென உண்பவர்கள் போற்றுகிறார்கள். அதற்குக்காரணம் உன்னிடம் நல்ல கறவைப்பசுக்கள் உள்ளமையே. மோரையும் தயிரையும் நெய்யுக்கு பொரித்த உணவு வகைகளையும் நீ உண்பவனுக்குப் போதியளவு கொடுக்கிறாய். இவை சேர்ந்த உணவு இனிமையான சத்துணவு. நான் சுவையான உணவு உண்ண விரும்பும்போது உனது வீட்டிற்கு வருவேன்'' என்றார் செல்லத்துரை.

**39. பிச்சையுக் குண்பான் பிளிறாமை முன் இனிதே**
**துச்சில் இருந்து துயர்கூரா மாண்பினிதே**
**உற்றபே ராசை கருதி அறனொரூஉம்**
**ஒற்கும் இலாமை இனிது.**

யாசித்து உண்பவன் கோபம் கொள்ளாதிருத்தல் இனிது. தனித்து குடும்பமாக வாழ்ந்து துன்பப்படாது வாழ்தல் இனிது. பேராசை கொண்டு அறவழியில் வாழக்கூடாது என்ற எண்ணம் இல்லாமல் இருத்தல் இனிது.

''யாசித்து வாழ விரும்பினேன். சிவனடியார்களென்றால் யாசித்துத் தான் உண்ண வேண்டும். நான் அனுபவித்த துன்பங்கள் என்னை சிவனடியராக மாற்றின. அதனால் தான் உணவை யாசித்துண்ண விரும்பினேன். ஒருநாள் ஒரு ஏழை தனது வீட்டிற்கு வந்து உணவருந்துமாறு இரந்தான். அங்கு சென்றேன். அவனது மனைவி கொடியவள். நான் சென்றதை கவனிக்காதவள் போல இருந்தாள். என்னை அழைத்துச் சென்றவன் அவளை இரந்தான். அவள் ஒருவாறு உணவு தர சம்மதித்தாள். எனக்கு கோபம் வந்துவிட்டது. அதனால் எழுந்து சென்றுவிட்டேன். கணவன் பதைபதைத்தான். அவள் வெளியே வந்து சொன்னாள் '' இரந்துண்ணும் பரதேசிக்கு கோபம்

வருகிறது. கோபப்படுபவன் உழைத்து உண்ணலாம் தானே. அவனைப் போகவிடுங்கள்'' என்றாள். அந்த ஏழை என்னருகில் வந்து அழுதாள். அப்பொழுது தான் நான் சிவனடியராக மாறியதற்கு துன்பப்பட்டேன். எனது குரு சொன்னார் ''உனது மனம் பக்குவப்படவில்லை. பக்குவப்படும்வரை பிச்சையெடுத்து உண்'' என்றார். சமூகத்திலிருந்து ஒதுங்கி தனித்து வாழ நினைப்பவனுக்கு துன்பம் தொடர்ந்து வரும். அது இயல்பென்றுணர்ந்து அத்துன்பங்களையெல்லாம் ஆண்ம விடுதலைக்கான சோதனைகள் என்று நினைப்பவனுக்கு அவையெல்லாம் இன்பங்களாக மாறிவிடும். அறவாழ்விலும் பேராசை பொறாமை பற்று பாசம் என்பன வந்து அச்சுறுத்தி தமது பக்கம் சேர்க்க நினைக்கும். அதற்கு நிறைந்த மனஉறுதி தேவை. நான் துறவுவாழ்க்கையை விரும்பி ஆரம்பித்தபோது நான் தேடிய சொத்துக்களில் ஆசையுண்டானது. குடும்பத்தவர்கள் நான் கஷ்ரப்பட்டு தேடிய சொத்தை ஆடம்பரமாக வாழ்ந்து அழிப்பதை நினைத்து கோபம் வந்தது. நாளடைவில் எனது மனவுறுதி அவையாவற்றையும் வென்றுவிட்டது. மனம் தான் எல்லாவற்றிற்கும் காரணி. மனத்தளர்ச்சியுள்ளவன் தான் நினைத்தவாறு வாழமுடியாது. எதிலும் தோல்வியை சந்தித்துக் கொண்டேயிருப்பான். மனஉறுதியுள்ளவன் வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியையும் மனத்திடத்துடன் சந்தித்து அதை வென்று மகிழ்வுடன் வாழ்வான். இப்போ நான் மனத்தளர்வின்றி வாழ்வதால் எனது அறவாழ்வு இனிக்கிறது. நான் சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டு நடந்தார் செல்லத்துரை. அவர் செல்வதை குடும்பத்தினர் துக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

**40. பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே**
**வித்துக்குற் றுண்ணா விழுப்பம் மிக இனிதே**
**பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய**
**கற்றலிற் காழ்இனிய(து) இல்.**

குற்றத்திற்குத் தண்டமாக பத்துப் பொருட்கள் கொடுத்தும் உள்ளூரிலிருந்து வாழுதல் இனிது. விதைக்கென வைத்திருக்கும் தானியத்தை குற்றியுண்ணாமை இனிது. பற்பல நாளும் திரும்பதிரும்ப பழமையான நூல்களைக் கற்பது இனிது.

அன்று ஓய்வாக இருந்த அருணாசலம் திரும்பத்திரும்ப ஒரு நூலை எடுத்து வெகுநேரம் கற்பதைப் பார்க்க மாதவனுக்கு ஆச்சரியமாகவிருந்தது. அதனால் அவன் கேட்டான் "ஐயா, இந்தப்பழம் நூலை நீங்கள் அடிக்கடி எடுத்து வாசிப்பதை நான் காண்பேன். அப்படி என்ன அந்த நூலில் உள்ளது"

அருணாசலம் சிரித்தார். பின்பு சொன்னார் " நல்ல நூல்களை திரும்ப திரும்ப வாசிப்பதால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். தானதர்மம் செய்யும் ஆர்வம் அதிகரிக்கும். நல்ல நூல்களின் கருத்துக்கள் வாசிக்கும் ஒவ்வொரு முறையும் புதிய புதிய கருத்துக்களைக் கொடுக்கும். நீயும் வாசித்துப்பார்"

" சரி ஐயா, என்று கூறிய மாதவன் தனது வேலைகளை செய்து முடித்துவிட்டு தனது வீட்டிற்குச் சென்றான். அங்கே அவனது இனத்தவனான கோவிந்தன் அவனது வருகைக்காக எதிர்பார்த்திருந்தான். கோவிந்தன் சிற சிறு குற்றச் செயல்களைச் செய்பவன். அக்குற்றச் செயல்களில் ஈடுபடும் போது அகப்பட்டால் தண்டப்பணம் செலுத்தவேண்டும்.

அல்லது ஊரை விட்டு வெளியேறிவிடல் வேண்டும். அவள் அகப்படும் வேளைகளில் தண்டப்பணத்தை செலுத்திவிட்டு ஊரில் வாழவே விரும்புவாள். ஊரைவிட்டு வெளியே சென்றாள் வாழமுடியாது என்று எண்ணுவான். சென்ற முறை திருடி அகப்பட்டபோது அவன் தண்டப்பணம் செலுத்தாத மாதவனிடம் வந்தான். மாதவன் தண்டப்பணத்தைக் கொடுத்து “கோவிந்தா, தண்டப்பணத்தை செலுத்திவிட்டு ஊரில் வாழ்வது தான் நல்லது. யாரும் இல்லாதஊரில் உன்னால் வாழமுடியாது. அத்துடன் குற்றம் செய்து அகப்பட்டால் ஊரவர்கள் என்றாள் மன்னிப்பார்கள். பிறதேசத்தவர் தண்டிப்பார்கள். அதனால் தண்டப்பணத்தை நான் தருகிறேன். நீ ஊருக்குச் செல்” என்றான். அதைக்கேட்டு சமாதானமடைந்த கோவிந்தன் ஊருக்குச் சென்றுவிட்டான்.

இப்போது கோவிந்தனைக் கண்டதும் மீண்டும் கோவிந்தன் களவெடுத்து அகப்பட்டு விட்டான் என்றே மாதவன் நினைத்தான். நெடுகக் கொடுத்துக் காட்டினால் இவன் திருந்த மாட்டான். என்ற நினைத்த மாதவன் இம்முறை பணம் கொடுப்பதில்லையென்று தீர்மானித்தான்.

“மாதவா, விதைக்கென்று வைத்த தானியங்களை குற்றி உண்ணக்கூடாது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை மறந்து நான் குற்றியுண்டுவிட்டேன். ஊரில் எல்லோரும் விதைத்து விட்டார்கள். நான் தான் விதைக்கவில்லை. விதைக்காவிட்டால் அடுத்த வருடம் சோறு இல்லாமல் போய்விடும். விதை தானியத்தை எடுத்துத் தின்றது எவ்வளவு பிழையென்பதை உணர்ந்து விட்டேன். அதனால் எனக்கு விதை தானியம் தா” என்று இரந்தான்.

“ஒருவனுக்கு விதை தானியம் கொடுப்பது புண்ணியம். ஒருவர் கொடுக்கும் சிறிதளவு விதை தாணியம் விளைந்தால் ஒரு குடும்பத்தின் ஒருவருட உணவுத்தேவையை பூர்த்தி செய்யம். இதை உணராதவனாக நீ இருக்கிறாய். ஏழைகளுக்குத் தான் உதவி செய்யவேண்டும். தீயவர்களுக்கு குடிகாரர்களுக்கும் உதவி செய்தால் பாவம் கிடைக்கும். உனது மனைவி பிள்ளைகளுக்காக இம்முறை உதவி செய்கிறேன். இனிமேல் விதை தாணியத்துக்கென்றோ தண்டப்பணம் கட்டவென்றோ என்னிடம் வராதே. கடைசிவரையும் நான் தரமாட்டேன்” என்று கூறிவிட்டு விதை தாணியத்தை கொடுத்தான் மாதவன்.